# சித்தமருத்துவத்தில் சுரம்

## நூல் ஆய்வு

### பகுதி – I


வைத்திய கலாநிதி தி. தயாளினி
BSMS (Jaffna), M.phil., PhD (Pera)
சிரேஸ்ட விரிவுரையாளர் தரம் I
சித்தமருத்துவத் துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

வைத்திய கலாநிதி மி.பி.வித்தியா BSMS(Jaffna)
மருத்துவ உத்தியோகத்தர்,
மாவட்ட சித்த மருத்துவமனை,
கிளிநொச்சி.

வைத்திய கலாநிதி ஜீ. லக்ஷிநிவேத்தா BSMS (Jaffna)
மருத்துவ உத்தியோகத்தர்,
பூநகரி பிரதேச செயலகம்,
கிளிநொச்சி

வைத்திய கலாநிதி ச.அஜிலா BSMS (Jaffna)
மருத்துவ உத்தியோகத்தர்



2017

# சித்தமருத்துவத்தில் சுரம்
# நூல் ஆய்வு
# பகுதி - I

**வைத்திய கலாநிதி.தி.தயாளினி**
BSMS (Jaffna), M.phil., PhD (Pera)
**சிரேஸ்ட விரிவுரையாளர் தரம் I**
**சித்தமருத்துவத் துறை**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

**வைத்திய கலாநிதி மி.பி.வித்தியா** BSMS (Jaffna)
**மருத்துவ உத்தியோகத்தர்,**
**மாவட்ட சித்த மருத்துவமனை, கிளிநொச்சி.**

**வைத்தியகலாநிதி ஜீ.லக்சிநிவேத்தா**BSMS (Jaffna)
**மருத்துவ உத்தியோகத்தர்,**
**பூநகரி பிரதேச செயலகம், கிளிநொச்சி**

**வைத்திய கலாநிதி ச.அஜிலா**BSMS (Jaffna)
**மருத்துவ உத்தியோகத்தர்**

## மாகாண ஆணையாளரின் வாழ்த்துச்செய்தி

சித்த மருத்துவத்தின் தொன்மையானது வரலாற்றிற்கு முற்பட்ட ஒன்றாகும். இத்தொன்மையான மருத்துவம் தற்போதைய சூழலில் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் சிறந்த சுகாதார சேவைகளை வழங்குவதற்கு காத்திரமான நடவடிக்கைகள் பலவற்றை மேற்கொண்டு வருகின்றது. இதன் ஒரு மைல் கல்லாக யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையானது வெகுவிரைவில் நிறுவன அந்தஸ்தை அடைவதற்காதன காலம் கனிந்துள்ளது.

இவ்வாறான சூழ்நிலைகளில் சித்தர்களால் அருளப்பட்ட சித்தமருத்துவ ஏட்டுச்சுவகள் பல தலை சிறந்த சித்த வைத்தியர்களாலும், வைத்திய ஆர்வலர்களாலும் நூலுருவாக்கப்பட்டிருந்த போதிலும் மேலும் பல ஆய்வுக்கு உட்படவும் நூலுருவாக்கப்படவும் வேண்டிய தேவை ஒன்று சித்த மருத்துவ வளர்ச்சியில் தவிர்க்கப்பட முடியாத ஒன்றாகும். அது மட்டுமன்றி வடக்கில் விசேடமான சித்த மருத்துவ நூல்கள் பல ஆக்க்பபட்டுள்ளமையை நாம் மறந்துவிடல் ஆகாது.

இவ்வாறான சூழ்நிலைகளில் சித்த மருத்துவத்தில் கூறப்படும் ''சுரம்'' நோய் நிலை தொடர்பிலான சித்த மருத்துவ நூல்கள் பலவற்றினை ஆய்வு செய்யும் சிறந்த ஒரு முயற்சியில் ஈடுபட்டுள்ள வைத்திய கலாநிதி T.தயாளினி அவர்களது முயற்சியானது போற்றுதற்குரிய ஒன்றாகும். ''சித்த மருத்துவத்தில் சுரம் நூல் ஆய்வு பகுதி I என்ற தலைப்பில் வெளியிடப்படும் இந்நூலானது பல்வேறு சித்த மருத்துவ நூல்களில் ''சுரம்'' எனப்படும் நோய் நிலையை தொடர்பான வகைப்படுத்தல், அறிகுறிகள் என்பன அடங்கிய ஒன்றாதக அமைந்துள்ளது. மேலைத்தேய மருத்துவத்திற்கு சவாலாக அமைந்துள்ள புதிதாக தோற்றம் பெறும் நோய நிலைமைகளில் பல இவ் ஆய்வில் இனங்காணக் கூடியதாக இருப்பது சித்த மருத்துவத்துறையின் பங்களிப்பின் மூலம் இச்சவால்களை வெற்றி கொள்ள பெரும் உதவியாக அமையும்.

வளர்ந்துவரும் சிறந்த சித்த வைத்தியர் என்ற வகையிலும் பல்கலைக்கழக விரிவுரையாளர் என்ற வகையிலும் வைத்திய கலாநிதி T.தயாளினி அவர்களது முயற்சி பாராட்டுக்குரியது மட்டுமன்றி பல்வேறு நூல் ஆய்வுகளுக்கும் வழிவகுக்கக் கூடியதொன்றாகும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இவரது இந்நூல் ஆய்விற்கு வாழ்த்துரை வழங்குவதில் வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் ஆணையாளர் என்ற வகையில் நான் பெருமிதம் அடைகின்றறேன்.

Dr. **திருமதி சி.துரைரட்ணம்**
**மாகாண ஆணையாளர்,**
**சுதேச மருத்துவ திணைக்களம், வடமாகாணம்.**

# சுரம் பற்றிய ஓர் கண்ணோட்டம்

சித்த மருத்துவத்தில் ஆரோக்கியம் பற்றியும் நோய்கள் பற்றியும் அவற்றிற்க்கான சிகிச்சை முறைகளும் பத்தியாபத்தியங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. சித்தர்களின் நோக்கம் ஆன்மீக வாழ்வில் எமது சரீரத்தை நோய்கள் பீடிக்கப்படா வண்ணம் பாதுகாத்தால்த்தான் ஆன்மீகதத்துவங்களை அடையப்பெற்று ஜீவாத்மா பரமாத்மாவுடன் இணைந்து வீடுபேறு அல்லது முத்திநிலையை அடையலாம் என்பதாகும்

சரீரம் ஆரோக்கியமாக இருந்தால் மட்டுமே ஆத்மா நிர்மலமான நிலையில் பரமாத்மாவுடன் அடையமுடீயும் என்பது தத்துவரீதியாகவும் சமயரீதியாகவும் ஞானிகளால் அறிவுறுத்தப்பட்ட விடயமாகும். உடல் ஆரோக்கியமாக இருப்பதற்கு சித்தர்களால் உணவு முறை மற்றும் யோகமுறைகள் தியானம் போன்றவைகள் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது. அத்துடன் நோய் வராமல் தடுப்பதற்கும் ஏற்பட்ட நோய்களைத் தீர்ப்பதற்கும் வழிமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆரோக்கிய வாழ்வு வாழ்வதற்கு சித்தர்களால் மானிடர்களிற்கு அருளப்பட்ட விலைமதிக்க முடியாத செல்வமே சித்தமருத்துவமாகும். சித்தர்கள் ஞானத்தினாலும் நுண் அறிவாலும் இறை அறிவாலும் கூறியவை தமிழ்மொழியில் பாட்டுக்கள் வாயிலாக எழுதப்பட்டுள்ளது. பாட்டுகளின் சரியான கருத்தை விளங்கிக்கொள்ளுவதற்கு தமிழ்மொழி பற்றிய சரளமான அறிவு இருந்தால் தான் உண்மையை விளங்கிக் கொள்ளலாம்.

சுரம் என்றபதம் **சுர்+அம்** என்ற இருசொற்சேர்ந்து உருவாக்கப்பட்டுள்ளது. சுர் என்றால் சுடுதல் அல்லது வெப்பம். அம் என்றால் இருத்தல். அதாவது சரீரம் தொடும்போது அல்லது ஸ்பரிசிக்கும் போது வெப்பமாக இருக்கும் என பொருட்படும்.எமது சித்தமருத்துவ நூல்களில் சுரம் 64 வகைப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் சன்னி என்ற நிலையில் சுரம், மயக்கம், வலிப்பு ஆகிய முக்கியலட்சணங்கள் காணப்படும். சன்னி எனக்கூறும்போது வாதபித்த கபம் ஆகிய முத்தோஷங்களும் பிரகோபமடைவதுடன் ஒருவரது அறிவையும் மயங்க செய்யும் அத்துடன் சுரமும் காணப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுரத்திற்கு காரணங்கள் பல கூறப்பட்டபோதும் ‘‘மந்தமலாது சுரம் வராது’’எனக் கூறப்படுகின்றது. எமது வயிற்றிலுள்ள அக்கினி மந்தமாவதுடன் அந்த அக்கினிக்குறைவால் வயிற்றில் ஆகாரம் சமிபாடு அடையாமல் ஆமம் அல்லது பக்குவப்படாத அம்சம் உருவாகின்றது. இது இரத்த சுற்றோட்டத்துடன் சர்மங்களுக்கு எடுத்து செல்லப்பட்டு சரீரத்தின்

சா்மத்திலுள்ள வியா்வைத் துவாரங்களை அடைக்கின்றது. இதனால் வெப்பம் வெளிச்செல்லமுடியாது தடைப்பட்டு சரீரத்தினுள் அதிகரிக்கின்றது. இதையே காய்ச்சல் வெப்பு அல்லது சுரம் என்கின்றோம். சுரம் ஏற்பட்டால் தலைவலி, மயக்கம், மந்தம், வலிப்பு ஏற்படுகின்றது. இந்தசமயத்தில் வியா்வை தடைப்படுவதுடன் சிறுநீா், மலம் வெளியேற முடியாது சரீர வெப்பம் அதிகரிக்கின்றது. முற்காலத்தில் சிறுகுழந்தைகளின் வெப்பம் அதிகரித்தால் குதமார்க்கமாக சவா்க்காரதிரி வைத்து மலத்தை இளக்கி வெளியேற்றுவார்கள் இது வெப்பை குறைக்கும். அதுபோல் சிறுநீரை போக்க கஷாயங்களையும் கொடுப்பார்கள் அல்லது வஸ்தி சிகிச்சையை மேற்கொள்வதன் மூலமும் மலம் இளகி வெளியாகிசுரம் அல்லது வெப்பத்தை குறைக்கும்.

சுரம் ஒரு ரோகமா அல்லது பல்வேறு காரணங்களால் ஏற்படும் ஒரு லட்சணமா? (குறி) என்ற கேள்வியும் எழுகின்றது. உதாரணமாக சின்னமுத்து, பொக்கிளிப்பான், வாந்திபேதி, அதிசாரம், கழிச்சல் போன்ற நிலைகளில் சுரம் ஒரு லட்சணமாக இருக்கின்றது. ஆனால் அவற்றின் காரணம் வெவ்வேறாக அமைகின்றது. சுரம் எனக்கூறும் போது தேகம் வெப்பமடைவதுடன் நாடி நடையும் அதிகரிக்கின்றது. இதன் மூலம் இந்தநிலையை தணிப்பதற்கு இருதயம் கூடுதலாக தொழிற்படுகின்றது என்பதை நாடி நடை அதிகரிப்பதை கொண்டு அறியலாம். வெப்பை தணிக்க ஈரச்சீலையை நெற்றியில் போடுவதுடன் சிறுதுணியை குளிா்நீரில் நனைத்து சரீரம் முழுவதையும் துடைத்துக் கொண்டிருக்கவேண்டும். சுரம் ஏற்படும் பட்சத்தில் வியா்வையை பெருக்குவதற்குரிய சுவேத சிகிச்சையை மேற்கொள்வதனால் வெப்பம் தணியும் அத்துடன் சிறுநீா் வெளிப்படவைக்கும் சிகிச்சை இலகு மலகாரி சிகிச்சைகளையும் செய்யலாம்.

சுரம் பல தன்மைகளை கொண்டதாக உள்ளது.
''தொடர்ச்சியாக சுரம் காய்தல்''
''படிப்படியாக சுரம் கூடுதல்''
''விட்டு விட்டு வரும் சுரம்''
வேறு லட்சணங்களுடன் தோன்றும் சுரம் உதாரணமாக வாந்தி கழிச்சல் ஆகவே இவற்றை எல்லாம் வைத்தியா் அறிந்து அதற்கேற்ப சிகிச்சை அளிக்கவேண்டும்.

சுரம் இருக்கும் ஒருவருக்கு 'அன்னத்தை காட்டாதே' என கூறுவார்கள். இதன் காரணம் அன்னம் மேலும் மந்தத்தை ஏற்படுத்தும். இந்நிலைகளில் கஞ்சி வகைகள் கொடுப்பது சிறந்தது. அதிலும் இஞ்சி மிளகு போன்ற மந்தத்தை அகற்றும் மூலிகைகளை சோ்ப்பது நன்மை பயக்கும்.

அதிசார சுரசன்னி என்ற ரோகத்தில் சுரம் அதிகரித்து காணப்படுவதுடன் அதனை நெருப்புக்காய்ச்சல் எனவும் கூறுவர். அதேபோல தேகத்தில் அடிகாயங்கள் காரணமாக சரீரத்தின் இழையங்கள் சிதைவடைந்து சுரம் ஏற்படும். இதனை அபிகாதசுரம் என அழைப்பர். ஆகவே சுரம் என்பது பல்வேறு காரணங்களால் சரீரவெப்பம் அதிகரிக்கும் நிலையையே குறிப்பிடப்படுகின்றது. பல நோய்களுக்கு சுரம் ஒரு லட்சணமாக காணப்படுகின்றதே தவிர அவற்றின் காரணங்கள் வேறுபட்டதாக அமையலாம்.

எமது நூல்களில் சுரத்தின் வகைகள் கூறப்பட்டபோதும் அந்த சந்தர்ப்பங்களில்நாடி நடை எவ்வாறு இருக்கும் என்பதை விரிவாக குறிப்பிடப்படவில்லை. சுரம் ஏற்பட்ட ஒருவரில் சரீரம் மட்டுமல்லாது மனமும் பாதிப்படைகின்றது. மனம் பாதிப்புற்ற நிலையில் ஒருவரால் சரியான முறையில் சிந்தித்து செயலாற்ற முடியாது. மனம் வெப்பம் அடையும் நிலையை மனஸ்தாபம் எனக்கூறுவர். ஆகவே சுரம் ஏற்பட்ட ஒருவரில் ஞாபகசக்தி இழக்கப்படும் என்பதனைக் கொண்டு மனம் பாதிக்கப்பட்டிருப்பதை அறியலாம். கடும் சுரம் ஏற்பட்டிருக்கையில் அறிவை இழந்து விளங்க முடியாதவற்றை பிதற்றிக்கொண்டிப்பதை ஒரு நோயாளியில் காணக்கூடியதாக இருக்கும்.

சுரத்தில் அதிகரித்த வெப்பம் அக்கினி மந்தப்படுதல், ஆமநிலை ஏற்படுதல் ஸ்ரோதஸ் அல்லது நாடிகளில் அவரோதம் அல்லது தடை ஏற்படுதல் தேக அவயவங்கள் பாரமாக இருத்தல், மயக்கம், வலிப்பு போன்ற லட்சணங்கள் காணப்படும்.

மேலைதேய வைத்தியமுறைப்படி கிருமிகளின் தாக்கத்தால் சுரம் ஏற்படுவதனால் மூளையில் உள்ள வெப்பநிலையை கட்டுப்படுத்தும் Thermostatic centre தனது தொழிற்பாட்டை அதிகரித்து வெப்பத்தை கூட்டுகின்றது. இதனால் கிருமியை அழிப்பது சுலபமாகின்றது. சுரத்திற்கு சுவேத சிகிச்சை அல்லது வியர்வை பெருக்கும் சிகிக்சையை மேற்கொள்வதனால் சுரம் குறைவடைகின்றது. இதனை சுரோதோமுக விசோதனசிகிச்சை என கூறுவர். அதேபோல் சுரத்தை குறைப்பதற்கு சிறுநீர் பெருக்கி இலகு மலகாரி வஸ்தி போன்ற சிகிச்சைகளை செய்வதுமுறையாகும்.

அதிசார சுரம் எனக்கூறும் போது கழிச்சலுடன் காணப்படும் சுரம். இதில் சுரம் ஒரு குறியே தவிர நோயல்ல. விஷமசுரம்/ மாறற்சுரம்/ முறைச்சுரம் என கூறும்போது அது விட்டுவிட்டு வரும் சுரத்தை குறிக்கும். பெரும்பாலும் இந்தநிலை ‘மலேரியா’ ரோகத்தில் காணப்படுகின்றது. சூட்டிற்கு காரணம் பித்தம். ஆகவே பித்ததோஷம் அதிகரிக்கும் நிலையே வெப்பத்திற்கு காரணமாகின்றது.

சுரத்தில் ஆமம் அல்லது பக்குவப்படாத அம்சம் உருவாவதனால் ஆமபாசன குடிநீராக சுக்கு, மிளகு, திப்பலி ஆகியவை சேர்ந்த கஷாயமும் வெப்பத்தை தணிக்க இலாமிச்சு, பற்படாகம், நிலவேம்பு ஆகியவை சேர்ந்த குடிநீரும் கொடுக்கப்படுகின்றது. வியர்வையை பெருக்குவதற்கும் சிறுநீரை அதிகரிப்பதற்கும் சீந்தில் நீர்முள்ளி வெள்ளரி வித்து கஷாயமும் இலகுலகாரியாக கடுக்காய் தான்றிக்காய் நெல்லிக்காய் கஷாயமும் வழக்கில் இருந்து வருகின்றது. ஒருமுறை அவித்த அன்னத்தை இஞ்சி, மிளகு, சீரகம் சேர்த்து மறு உலை ஏற்றிகொடுப்பார்கள். இது அக்கினியை தூண்டி கோளாறடைந்த பித்தத்தை சமநிலைக்கு கொண்டு வருவதற்கு உதவும்.

இந்த நூலில் அதன் ஆசிரியர் பல காரணங்களால் ஏற்படும் சுரத்தையும் அவற்றின் பிரிவுகளையும் லட்சணங்களையும் ஒரே நோக்கில் பல புத்தகங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற தரவுகளையும் வைத்து ஆராயமுற்பட்டுள்ளார். இந் நூல் மருத்துவ மாணவர்களுக்கும் மருத்துவர்களுக்கும் அவர்களுடைய ஆய்வுகளுக்கும் ஆதாரமாக இருக்கும் என நம்புகின்றேன்.

சுரம் வெப்பம் அதிகரிப்பதனால் ஏற்படும் ஒரு குறியாகும். அத்துடன் தலைவலி தேக அலுப்பு, பசியின்மை போன்ற லட்சணங்கள் காணப்படும். ஒவ்வொரு சுரமும் அதன் காரணத்தை பொறுத்து விஷேட லட்சணங்களை உருவாக்கும்.

பரராஜசேகரம் மற்றும் சித்தமருத்துவ நூல்களில் 64 சுரங்கள் பற்றியும் தோஷப்பரிகாரம் சப்தசுரம் நவசுரம் என பல வகையான சுரத்தின் போக்குகள் குறிப்பிடப்பட்டுள்ளன. சுரத்தில் மந்தம் ஏற்படுவதும் அக்கினி அதிகரிப்பதும் தேகத்தில் குத்துளைவு வேதனை ஏற்படுவதும் காணக்கூடியதாக இருக்கின்றது. மந்தத்தால் சுரம் ஏற்படுவதனால் பாசன தீபன குடிநீர்கள் கொடுக்கும் போது மந்தநிலை நீங்கி சுரமும் தணிவடையும். பல வைத்திய நூல்களிலிருந்து சுரத்தின் லட்சணம் வகைகள் அட்டவணை மூலம் இந்தபுத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நூல் சுரம் பற்றிய பல்வேறு நூல்களில் காணப்பட்ட விஷயங்களை தொகுத்து ஒரே நூலாக வெளியிடப்பட்டுள்ளது. இந் நூல் மாணவர்கள் விரிவுரையாளர்கள் வைத்தியர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பதில் இரு கருத்துக்கள் இருக்கமுடியாது.

**பேராசிரியர் சு.பவானி**

## சித்த மருத்துவத்தில் சுரம் பகுதி I

சித்த மருத்துவமானது மிக தொன்மை வாய்ந்த வைத்திய முறைகளில் ஒன்றாகும். இறைவன் சிவனிடமிருந்து பார்வதி தேவி, நந்திதேவர் மூலம் ரிஷிகள், முனிவர்கள், சித்தர்களுக்கு கூறப்பட்டு எமக்குக் கிடைக்கப் பெற்றதாகும். தென்னிந்தியாவிலிருந்து இங்கு கொண்டு வரப்பட்டுள்ள வைத்திய முறையான சித்த மருத்துவம் எமது நாட்டிக் சுதேச வைத்திய முறைகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது என்பது சித்த மருத்துவ வரலாறாகும்.

தற்போது சித்த மருத்துவம் பாரம்பரிய வழித்தோன்றல்களின் வைத்தியமாக மட்டுமல்லாது பல்கலைக்கழக கல்வி முறை மூலம் அனைவரும் அறியக் கூடியதாக இருக்கின்ற அளவிற்கு வளர்ச்சி பெற்றிருக்கின்றது.

செவி வழியாக கூறப்பட்டு குரு சிஷ்ஷைய வழியில் வைத்திய முறை கூறப்பட்டு மேற்கொள்ளப்பட்டன. பின் அவ் வைத்திய முறைகள் ஏடுகளில் பதியப்பெற்று பின் ஏடுகள் நூல் வடிவங்களாக உருவாக்கப்பட்டன. ஏடுகள் எல்லாமே நூல் வடிவம் பெறவில்லையாயினும் பதிக்கபெற்ற நூல்களும் முற்று முழுதாக பேணப்பட்டனவா என்பதும் நிச்சயமில்லை இருப்பினும் சித்த மருத்துவம் எனும் கடலில் எமக்கு கிடைக்கபெற்ற வற்றில் கல்வித் துறைக்கான பாடப் புத்தகங்களாக இருக்கக் கூடியவற்றிலும் நாம் கற்றுக் கொண்டது ஒரு கைபிடியாளவே. கற்க வேண்டியவை ஏராளம் ஏராளம்

எமது சித்த மருத்துவத்தை வளர்ச்சிப் பாதைக்கு மேலும் இட்டுச் சென்று எமது அறிவை மேம்படுத்த வேண்டுமெனில் சித்த மருத்துவம் தொடர்பான எல்லா நூல்களும், ஏடுகளும் தேடப் பட வேண்டும், தொகுக்கப்பட வேண்டும் அவை ஆய்வு செய்யப்பட வேண்டும்.

ஆய்வு செய்ததை கையாள்ப்பட வேண்டும். அந்த வகையில் வைத்திய கலாநிதி திருமதி தி.தயாளினி மற்றும் வைத்தியர்களான மி.பி.வித்தியா, ச.அஜிலா, ஜீ. லக்ஷிநிவேதா ஆகியோரின் தேடல் ஆய்வுத் தொகுப்பாக ‘‘சித்த மருத்துவத்தில் சுரம்’’ எனும் இந்நூல் வெளிவர இருக்கின்றது.

சுரம் என்பது காய்ச்சல் என பொதுவாலக கூறப்படுகின்ற ஒரு நோய் நிலை ‘‘உடல் வெப்பநிலை சாதாரண அளவை விட அதிகரித்தல்’’ என அமையும் சுரம் எழுது மருத்துவ அடிப்படையில் காரணம் முக்குற்ற வேறுபாட்டால் ஏற்படுகின்ற அதேவேளை அவற்றின் குணம். குறிகளிற்கேற்ப, வகைப்படுத்தப்படுகின்றது.

சுரம் பற்றிகூறுகின்ற சித்த மருத்துவ நூல்களின் விசேடமாக பரராஜசேகரம் (யாழ்ப்பாணத்திற்கான நூல்) அகத்தியர் இரண்டாயிரம்

முதலான பதின்மூன்று நூல்களிலிருந்து தொகுத்து சுரத்தின் வரைவிலக்கணம் காரணம், முக்குற்ற வேறுபாடு, குணங்குறி பற்றி இந்நூலில் வழங்கியுள்ளார்கள். அத்துடன் முடிந்த வரையில் தற்கால நோய் நிலையில் சுரத்தின் வகைகள், எந்தெந்த நோய்களுடன் ஒத்த குணங்குறிகளை கொண்டவையாக இருக்கின்றன என்பது பற்றியும் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

சிறந்ததொரு முயற்சியான சித்த மருத்துவர்களிற்கு தேவையான ஒரு நூலாக இந்நூலை வெளியிடுகின்ற சித்த மருத்துவத்தை யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் வைத்திய கலாநிதி திருமதி தி.தயாளினி மற்றும் வைத்தியர்களான மி.பி வித்தியா, ஜீ.லக்ஷிநிவேதா, ச.அஜிலா ஆகியோரிற்கு சித்த மருத்துவர் என்ற வகையில் நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நன்றி

**வைத்தியர் திருமதி சிறிபிரியா சுஜித்திரன்**
**மருத்துவ உத்தியோகத்தர்**
**சுதேச மருத்துவ முறைக்கான தேசிய நிறுவனம்**

# என்னுரை

சித்த மருத்துவமானது மக்கள் ஆரோக்கியமாக இருப்பதற்கும் வந்த நோயைத் தீர்ப்பதற்குமான முறைகளை இறைவனால் ரிஷிகள், முனிவர்கள், சித்தர்கள் மூலம் அருளப்பட்ட ஒரு புனிதமான மருத்துவமாகும். பிற்காலத்தில் பல சித்தமருத்துவர்கள் தாம் கைகண்ட மருந்துகளையும் நோய் பற்றிய குறிப்புகளையும் எழுதிய பல நூல்கள் வெளிவந்துள்ளன. சித்தர்களின் தத்துவம் ஜீவாத்மாவை பரமாத்மாவுடன் இணைப்பதாகும். ஆத்மா இறைவனை அடைய உடல் இன்றியமையாத ஒன்றாகும். இந்த உடல் ஆரோக்கியமாக இருப்பதற்கும் நோயால் வருந்தும் போது அதனைத்தீர்ப்பதற்குமான வழிகளையும் தெளிவாகக் கூறியுள்ளார்கள். ஆரோக்கியம் என்பது உடல் உளம் சமூக ஆன்மீக நன்னிலை என்பதைத் தெளிவாக பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளிற்கு முன்பே கூறியுள்ளனர். உளத்தை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கு பிராணாயாமம், யோகா போன்ற பயிற்சி முறைகளை தெளிவாகக் கூறியுள்ளார்கள். மனித உள நோய்களைப் பற்றியும் அவற்றின் வகைகளைப் பற்றியும் மருந்துகளையும் மருத்து செய் முறைகளையும்,உளம் தாக்கப்படுவதால் உடலும் உடல் தாக்கப்படுவதால் உளமும் பாதிக்கப்படுவதாக சித்த மருத்தவத்தில் கூறப்பட்டுள்ளது.

இறைவனால் அருளப்பட்ட சித்தமருத்துவமுறைகளை அகத்தியர் முதலிய மகரிஷிகளும் போகர், கொங்கணர் முதலிய பதினெண்சித்தர் வரிசையில் வந்தவர்களும் தமிழில் எழுதி பின் அவற்றை தொகுத்து பல நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூலில் அகத்தியர் 2000 என்னும் நூல் அடங்கியுள்ளது. இவ்வாறான பல நூல்கள் எமக்குக் கிடைக்கவில்லை.எமக்குக் கிடைத்த ஆதிநூல்களில் சுரம் பற்றி குறிப்பிடப்பட்ட நூல்களை நாம் எடுத்து அவற்றை ஆய்வுரீதியாகத் தொகுத்து ஒரு தனி நூலாக சித்தமருத்துவ மாணவர்களும் ஆய்வு செய்யும் மாணவர்களும் பயன்பெறும் பொருட்டு இந்நூலைத்தொகுத்துள்ளோம். இந்நூலில் ஆதியில் உள்ள விடயங்கள் எதிலும் மாற்றம் செய்யப்படாமல் நூலாய்வு முறை மூலம் தொகுக்கப்பட்டது.சில நூல்களில் குறிப்பிடப்பட்ட பல விடயங்கள் வேறு சில நூல்களில் குறிப்பிடப்படவில்லை. மாணவர்கள், ஆய்வாளர்கள், வைத்தியர்கள் சுரம் பற்றிய முழு அறிவையும் ஒரே நூலில் பெற வேண்டும் என்னும் நோக்கத்திறக்காகவே இந்நூல் உருவாக்கப்பட்டது. ஓர் ஆய்வு செய்யும் போது சித்தமருத்துவத்தில் நூலாய்வு எவ்வளவு முக்கியமானது என்பதை எனது சித்தமருத்துவ முதுகலைமாணிபடிப்பின் போதும் கலாமணிப்படிப்பின் போதும் உணர்ந்துள்ளேன். எனக்கு சித்தமருத்துவ நூல்களை எவ்வாறு நூலாய்வு செய்து எழுதுவது என கற்றுக்கொடுத்த எனது பெரு மதிப்பிற்குரிய அமரர் வாழ்நாள் பேராசிரியர் C..சிவஞானசுந்தரம் (மருத்துவபீடம், யாழ் பல்கலைக்கழகம், வாழ்நாள் பேராசிரியர் வசந்தி தேவநேசம் (மருத்துவபீடம், பேராதனைப்

பல்கலைக்கழகம்) அவர்களுக்கும் நான் இந்நேரத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். எனக்கு ஒரு மகிழ்ச்சியான விடயம் என்னவென்றால் எனது மாணவிகள் தற்போது சித்த வைத்தியர்களாக உள்ள வைத்திய கலாநிதிகளான மி.பி.வித்தியா, ஜீ.லக்சிநிவேத்தா, ச.அஜிலா ஆகியோருக்கு நான் பேராசிரியர்களிடம் கற்றதை இயன்றளவு விளங்கப்படுத்தி இந்நூலை என்னுடன் சேர்ந்து ஆய்வு செய்து எழுததமது பெருமளவு நேரத்தை ஒதுக்கி இந்நூல் சிறப்புற அமைய சேவையாற்றியுள்ளார்கள். இந்நூலை தொகுக்கும் போது எனக்கு சித்தமருத்துவ பாடத்தை கற்பித்துக்கொடுத்த எனது குருமார்களாகிய பேராசிரியர் சு.பவானி, டாக்டர் திருமதி மி.சிறிக்காந்தன் அவர்களிற்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். நான் அவர்களிடம் கற்ற விடயங்கள் பல இந்நூலைத்தொகுக்கும் போது நினைவுக்கு வந்தன. சித்தமருத்துவ நூல்களை எழுதும் போது பழமை அப்படியே பேணப்படவேண்டும். அவற்றை நாம் எமது அறிவுக்குத் தக்கபடி மாற்றக்கூடாது அவ்வாறு மாற்றினால் சித்த மருத்துவம் எதிர்காலத்தில் தனது தனித்துவத்தை இழந்து கலப்படமாக்கப்படும் நிலை உருவாகும்.

இந்நூல் சித்த மருத்துவ மாணவர்கள், ஆய்வாளர்கள், வைத்தியர்கள் போன்றோர்களிற்கு பெரும் உதவியாக இருக்கும் என நம்புகின்றேன். இதை இனிதே ஆய்வு செய்ய உதவிய எனது அன்பிற்கினிய சித்தவைத்தியர்கள் மூவரிற்கும் எனது குருமார்களிற்கும் இவை எல்லாவற்றிற்கும் மேலாக இதை எழுத வேண்டும் என்னும் ஆவலை தூண்டி இடையூறு இன்றி தொகுக்க உதவிய எல்லாம் வல்ல இறைவனுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கின்றேன்.

**வைத்தியகலாநிதி.தி.தயாளினி**.Mphil;PhD
**சிரேஸ்ட விரிவுரையாளர் தரம்** I
**சித்தமருத்துவத் துறை**
**யாழ்பல்கலைக்கழகம்.**

| **பொருளடக்கம்** | **பக்க இலக்கம்** |
|---|---|
| சுரத்தின் வரைவிலக்கணம் | 1 |
| முக்குற்ற வேறுபாடு | 2 |
| சுரத்தின் வேறுபெயர்கள் | 5 |
| சுரம் ஏற்படுவதற்கான காரணங்கள் | 5 |
| சுரத்தின் வகைகள் | 9 |
| சுரத்தின் வகைகளின் குறிகுணங்கள் | 19 |
| அட்டவணைகள் | 64 |
| தொகுப்பு | 140 |
| உசாத்துணை நூல்கள் | 150 |

# சுரம்

சித்தமருத்துவத்தில் சுரம் ஒரு நோயாகக் கருதப்படுகின்றது. இந்நோயைப் பற்றிய பல்வேறு விபரங்கள் பல நூல்களில் கூறப்பட்டுள்ளது. சுரத்தின் மறுபெயர், இதன் வரைவிலக்கணம், சுரம் ஏற்படுவதற்க்கான காரணங்கள், சுரத்தின் வகைகள் அவற்றின் குணங்குறிகள் ஒவ்வொரு வகைகளிற்குமான மருந்துகள் என்பன கூறப்பட்ட போதிலும் இவை ஒவ்வொன்றும் எல்லா நூல்களிலும் குறிப்பிடப்பட வில்லை. எமக்குக் கிடைத்த நூல்களில் மேற்கூறிய சில விடயங்கள் சில நூல்களில் குறிப்பிடப்பட்டும் வேறு சில நூல்களில் வேறு சில விடயங்கள் குறிப்பிடப்பட்டும் உள்ளன.சுரம் பற்றிய விபரங்கள் முழுவதையும் ஒரே நூலில் படிப்பதற்கு இலகுவாக இந்நூலில் இலக்கிய ஆய்வு முறை மூலம் தொகுக்கப்பட்டுள்ளது. சித்தமருத்துவத்தில் 4448 நோய்கள் உள்ளதாக அகத்தியர் 2000 என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. சுரமானது செடத்திலுள்ள பிணிக் கெல்லாம் ராசாவாகும் என சரபேந்திர வைத்தியத்திரட்டு என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது.

முதலில் சுரம் உண்டாகிய வரலாறாக **செகராஜ வைத்திய திறவுகோல், சரபேந்திர வைத்தியத்திரட்டு, யூகி வைத்திய சிந்தாமணி** என்னும் மூன்று நூல்களிலும் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

கைலாசபதியான பரமசிவன் முன்னம் தஷாபிரயாபதி செய்தயாகத்தை அழிப்பதற்கும் தான் யோகம்(தபஸ்) செய்கையில் அழிக்க வந்த மன்மதனின் கணையை எரிப்பதற்கும் காரணமான மூன்றாவது நெற்றிக்கண்ணில் இருந்து தோன்றிய நெருப்பே சுரமாயிற்று.

**சரபேந்திர வைத்தியத் திரட்டு என்னும் நூலில்**

சொல்லவேசுரத்தினிடதிறமைகேளாய்
செடத்திலுள்ளபிணிக்கெல்லாம் ராசாவாகும்
எல்லவேநமனுக்குமொக்குமொக்கும்
எழிலோடுபிரதாபகோபமாகும்
கல்லவேதக்கினிடவேள்வியைத்தான்
சாம்பசிவன் கோபத்தாலழித்தபோது
நெல்லவேநெற்றிக்கண் சுவாலைதன்னில்
நேராகபுறப்பட்டுநேர்ந்ததாமே. 2(யூ.வை.சி.)

**.யூகிவைத்தியசிந்தாமணி என்னும் நூலில்**

தக்ஷனால் அவமானம் செய்யப்பட்ட பரமசிவனுடைய கோபத்தால் ஏற்பட்ட ஷம் காரத்திலிருந்து உண்டானதாகும்.

பக்குவமாயாயாசம் துர்ப்பலமேகாணும்

பூணவேகுளிர்மந் தாக்கினிகாணும்
பொங்கமுடன் நாடிதான் படபடத் தோடும்
காணுவாய் இதெல்லாம் சுரத்துக்குபிள்ளையென்று.

**பரராசசேகரம் சுரரோக நிதானம்** என்னும் நூலில் சுரத்தின் வரைவிலக்கணமாக“ திருவுரு கைலை என்னும ‘.........’’ என்னும் பாடல் மூலம் ஞானச்செல்வம் (என்றென்றும்) பொருந்திய கைலாயம் என்னும் மலையின் கண்ணே வீற்றிருந்து அருள்வழங்கும் தலைவராகிய சிறீ கண்ட பரமேசுவரன் தூல சூக்கும் உருவத்துடன் கூடிவாழுகின்ற உயிரினங்களின் நன்மைக்காகக் கற்பித்த (உபவேதங்களில் ஒன்றாகிய ஆயுள் வேதம் என்ற அறிவு நூலில் கூறப்பட்டபடி வெல்லுவதற்கு அரிய தீவினை (யின்) விளைவாகிய பாவம் காரணமாக உண்டாகிய நோய்களுக்குள்ளே சுரம்என்னும் காய்ச்சல் வகைகளில் முறையாகச்சொல்வற்கு பிரணவ வடிவினராகிய ஆனைமுகக்கடவுளின் திருப்பாதங்களை துணையாக மனதில் இருத்துவோமாக எனக்குறிப்பிட்டு தீவினையின் காரணமாக ஏற்படும் நோய்களுள் ஒன்றாக சுரம் கூறப்படுகின்றது.

**சண்முகவேலு எழுதிய நோய் நாடல் நோய் முதல் நாடல் திரட்டு என்னும் நூலில்**

உடலின் இயற்கை சூடு தன்னளவுக்கு மிஞ்சி எழுந்து உடல் முழுவதுமோ அல்லது சிலபாகங்களிலோ அதிக வெப்பமாயிருத்தல், கண் எரிவு, வாய் குமட்டல் ,வாந்தி, தலைப்பாரம் அல்லது தலைவலி, உடம்புவலி முதலிய பல குறிகுணங்களை தோற்றுவிக்கும். இதுதனி நோயாகவும் மற்றநோய்களுக்கு துணை நோயாகவும் வரும்.

**குப்புசாமி முதலியார் எழுதிய சித்தமருத்துவம் பொதுஎன்னும் நூலில்**

உடலின் இயற்கைச் சூடு தன்னளவுக்கு மிஞ்சி எழுந்து, கால் எரிச்சல், வாய் குமட்டல், உடல் நோதல், வாந்தியாதல் ஆகியகுணம் குறிகளைத் தோற்றுவிக்கும் எனக் கூறப்பட்டுள்ளது.

## முக்குற்ற வேறுபாடும் சுரமும்

சுரம் ஏற்படுவதற்கு ஆமம் முக்கியகாரணமாக கூறப்படுகிறது.

இதனை **அகஸ்தியர் 2000**இல்

தேகத்தில் சாப்பிட்ட உணவு சீரணமாகாமல் ஆமதோஷமாகி வயிற்றிலுள்ள ஜாடராக்கினியை வெளியே வீசச் செய்யும். அப்போது தொட்டால் சுரம் காயும் என கூறப்படுகின்றது.

**வெங்கட்டராஜன் எழுதிய சரபேந்திர வைத்தியத் திரட்டு என்னும் நூலில்**

தவறுதலான உணவு, நடைமுறைகளாலும், வாதம் முதலிய தோசங்கள் ஆமாசயத்தையடைந்து அங்குள்ள ரஸதாதுவுடன் கலந்து, கோஷ்டத்திலுள்ள (குடல்) அக்னிபலத்தை குறைந்து (உஷ்ணத்தை) வெளிக்கொணர்ந்து ஜ்வரத்தை உண்டாக்குகின்றது. மேலும், விகாரத்தையடைந்த ரஸதாதுவியர்வைசெல்லும் குழாய்களையும், ரஸவாகஸ் ரோதஸ்களையும் அடைப்பதால் ஜ்வரம் உண்டாகின்றது எனக் கூறப்பட்டுள்ளது.

**கோஷாயிசுவாமிகள் அருளிய அனுபோக வைத்தியபிரம்ம ரகசியத்தில் சுரம் வரும் காரணமாக**,

வாதாதிதோஷ பிரகோபத்தால் ஆமாசயத்தைசேர்ந்து அஜீரணம் உண்டுபண்ணும் சீரணிக்காத ஆகாரங்கள் ரோமகூபங்கள் முதலிய ஸ்ரோதரமார்க்கங்களை தடுத்து பக்குவாசயத்திலிருக்குஞ் சாடராக்கினியை வெளிப்படுத்தி அத்துடன் கலந்து தேகமெல்லாம் வியாபித்து அதிசூடான சுரத்தை உண்டுபண்ணும். சுரத்தில் ரோமகூபாதி சுரோத மார்க்கங்களை தடுக்கிறதால் வியர்வைதோன்றாமல் உடல் இந்திரியங்கள் மனது இவைகளில் அதிதாபஞ், சர்வாங்கமும் வேதனையென்னும் லட்சணங்கள் ஏககாலத்தில் யெந்தரோகத்தில் தோன்றுமோ அதற்குசுரமென்றுபேர் என கூறப்பட்டுள்ளது.

**நோய் நாடல் நோய் முதல் நாடல் திரட்டுஎன்னும் நூலில்**

குடல்தனில் சீதமலாதுசுரம் வராது
அசீரணமன்றிசுரம் வராது

இரைப்பையில் ஆமம் என்றசீதம் பெருகிஅதன் காரணமாககபம் அதிகரித்து அங்குள்ள அனல் எனும் உயிரக்கினியை தன்னிலைவிட்டுமாறி, வெப்பம் கூடி, நரம்பின் வழியாகபுற உடலிற் பரவிதோன்றும்.

அக்காரணங்களாலுண்டாகும் சுரநோயில் இரைப்பை, குடல் தம் இயற்கைதொழில் கெடுவதால் நீர்,எரு இவ்விரண்டும் கேடடையும் புறவழிசுரங்களில் ஆமம் ஏற்படாமலே முக்குற்றங்களையும், உடல் தாதுக்களையும், கழிபொருட்களையும் தாக்கும்.

வாத பித்த, கபங்கள் தனித்தனிமிகுதல், கலந்து கோளாறடைதல், இவைக்குதக்க படிபலவகை சுரங்கள் ஏற்படும். பத்தியபிழையால் சுர தோடங்களும், காலம், இடம், உடல், வெப்பமிகையால் அம்மைச்

சுரங்களும்,தொற்று நோய் புழுவால் மகாமாரி போன்ற சுரங்களும் மற்றும் பல பிறசுரங்களும் தோன்றும் என கூறப்பட்டுள்ளது.

**அகத்தியர் வைத்தியகாவியம் 1500 எனும் நூலில்**

தானென்றவன்னிவாயு
தாண்டிமேற் கொண்டுதானால்
தானென்றசுரத்தாற் தோடம்
தாகமும் மிகுதியாகும்

தீ,வாயு இவை இரண்டும் சேர்ந்து மிகுந்திருப்பின் காய்ச்சலும், தாகம் போன்றவையும் மிகுதியாகும்.

**பரராசசேகரம் சுர ரோகநிதானம் என்னும் நூலில்**

வாதமடாதே மேனிகெடாதே......... என்னும் பாடல் மூலம் சுரநோயில் வாததோசம் மீறில் நோயாளியின் தேகபலம் குறைதலும் பித்ததோசம் மீறில் சத்தி எடுத்தலும் கபதோசம் மீறில் இருமலும்,இரைப்பை குடல் இவற்றில் சீதளம் உண்டாகில் வாயுபீடையும் தோன்றும்.

அத்துடன்

மந்தாக்கினியாற் சுரமும், அதனோடு வாதாதி முத்தோஷங்கள் கோளாறடைந்து விகாரப்பட்டாற் சன்னியும், நீர்மயமான கபத்தின் கோளாறால் வீக்கமும், தொடர்ச்சியான மேகசம்பந்த நோயிருப்பின் சூலையும் ஏற்படும்.

அபத்தியமன்றி தோஷவிகார மணுகாதே...... என்னும் பாடல் மூலம் சுரநோயில் எதிரிடையான அபத்திய உணவையும் செயலையும் செய்தால் அபத்திய தோஷம் முதலாகக் கூறும் எழுவகைத்தோஷ விகாரங்கள் உண்டாகும் அன்றி அமிர்தம் போன்ற மருந்துகளின் வீரியமும் கெடும்.

## சுரத்தின் வேறுபெயர்கள்:

**செகராசசேகரம் வைத்திய திறவுகோல்** என்னும் நூலில் சுரத்திற்கு மறு பெயராக கனல் எனவும்,

**சித்த மருத்துவம் பொது** என்னும் நூலில்

வெம்மை
வெப்பு நோய்,
காந்தல்,
காங்கை,
காய்ச்சல்,
சூடு,
அனல்,
பிறப்பிலும் இறப்பிலும் தொடரும் நோய்,
பம்மல் நோய்

எனவும் பல்வேறு பெயர்களாக கூறப்பட்டுள்ளது.

## சுரம் ஏற்படுவதற்கான காரணங்கள்

பதின்மூன்று நூல்களின் ஆய்வின்படி,47 காரணங்களால் சுரம் ஏற்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது. இந்த 47 காரணங்களும் ஒரே நூலில் கூறப்படவில்லை. சில காரணங்கள் சில நூல்களிலும்,வேறு சில காரணங்கள் வேறு சில நூல்களிலும் கூறப்பட்டுள்ளது இதன் விரிவான விபரம் அட்டவணை 1ல் காட்டப்பட்டுள்ளது இந்தக் காரணங்கள் தொகுத்து தவறான அன்ன பானாதிகளின் பிரயோகம், தவறான பழக்கவழக்கங்கள்,நோய்நிலைகள் என வகைப்படுத்தப்பட்டு அட்டவணை 1a ல் காட்டப்பட்டுள்ளது.

**மலக்கட்டு, ஆகார கோளாறு** என்னும் காரணங்கள் செகராஜ சேகரம், அகத்தியர் 2000, சித்த மருத்துவம் பொது, நோய் நாடல் நோய் முதனாடல் திரட்டு, பரராசசேகரம் சுர ரோக நிதானம் ஆகிய ஐந்து நூல்களில் கூறப்பட்டுள்ளது. **கடும் வெயிலில் திரிதல்** சுரத்திற்கான காரணமாக அகத்தியர் 2000, நோய் நாடல் நோய் முதனாடல், சித்த மருத்துவம் பொது, பரராசசேகரம் சுர ரோக நிதானம் ஆகிய நான்கு நூல்களிலும் கூறப்பட்டுள்ளது. **மந்தம்** சுரத்திற்க்கான காரணமாக அனுபவ வைத்திய பிரம்ம ரகசியம், நோய் நாடல் நோய்முதனாடல், பரராசசேகரம் சுர ரோக நிதானம் ஆகிய மூன்று நூல்களில் கூறப்பட்டுள்ளது.

**கோபம், தலையில் சுமை தூக்குதல்** என்பன அகத்தியர் 2000, சித்த மருத்துவம் பொது, பரராஜசேகரம் சுர ரோக நிதானம் ஆகிய நூல்களிலும், **மிகு வெப்பம், மிகுந்த குளிர்ச்சி, மிகுந்த புணர்ச்சி, தூக்கமின்மை, அடிபடல், விடங்கலந்த உணவு, மிகுந்த நடை, மழையில் நனைதல்** இவை சுரம் ஏற்படும் காரணங்களாக செகராஜசேகரம் வைத்திய திறவுகோல், நோய் நாடல் நோய் முதல் நாடல் ஆகிய நூல்களில் கூறப்பட்டுள்ளது. **பசியை அடக்கல், கடுமையான ஓட்டம், நாடுகளின் வேற்றுமை** என்பன சுரம் வரும் காரணங்களாக சித்த மருத்துவம் பொது, நோய் நாடல் நோய் முதல் நாடல்ஆகிய நூல்களில் கூறப்பட்டுள்ளது.

**மல மூத்திரம் அடக்கல்** என்பது தன்வந்திரி வைத்தியம்,சித்த மருத்துவம் பொது விலும்,**அதிகமாக நீராடுதல், உள்ளம் மாறுபாடடைதல், கெட்ட எண்ணம் கொள்ளுதல்** இவை அகத்தியர் 2000, நோய் நாடல் ஆகிய நூல்களிலும், **விடங்கலந்த உணவு** சித்த மருத்துவத்திலும், **மிகுந்த நடை, அலைச்சல், இலை ஊறிய நீரை குடிப்பது, அடிதடியால் உடல் நோதல், குரல் கதறும்படி சத்தமிட்டு தொண்டை கட்டுதல், பசி கிடப்பது,** இவை பரராசசேகர சுரரோக நிதானத்திலும் கூறப்பட்டுள்ளது. **கதறி கூவல்** நோய் நாடல் நோய்முதல் நாடலிலும் பரராசசேகரம்சுரரோக நிதானத்திலும் கூறப்பட்டுள்ளது.

**அதிக நீர் அருந்துதல், பகல் நித்திரை, இரவில் ஜாகரணம்** என்பன தன்வந்திரி வைத்தியம்,**நாட்பட்ட ஐயம், படுக்கை வேறுபடல், தான் செய்த பழவினை சூழ்தல்** இவை சித்த மருத்துவம் பொதுவிலும், **புகையிலை போடுதல்** அகத்தியர் 2000 லும் கூறப்பட்டுள்ளது.

முக்குற்றம் **கூட்டக்கூடிய உணவுகள், பனியில் திரிதல், மிகுந்த காற்று, விடக் காற்று, தேகத்தில் விடப்புழுக்கள் உட்சென்று துளைத்தல், அதிகமாக எண்ணை நீராடுதல், துர்நாற்றமுள்ள வியர்வை, செரியாமை, பயம், தோடமுண்டாக்ககூடிய எண்ணை நீராடியபின் பெண் புணர்ச்சி, முக்குற்ற கேடு, மிகு உழைப்பு** இவை சுரத்தை ஏற்படுத்தும் காரணங்களாக நோய் நாடலில் மட்டும் கூறப்பட்டுள்ளது.

**அட்டவணை 1a: சுரத்திற்க்கான காரணங்களின் வகைப்பாடு**

| **தவறான உணவு** | **மாறுபட்ட(தவறான) நடைமுறை** | | | **நோய் நிலை** |
|---|---|---|---|---|
| | **வாதப்பிரகோபம்** | **கபப் பிரகோபம்** | **பித்தப்பிர கோபம்** | |
| | மிகுந்த காற்று விடக் காற்று மிகுந்த நடை. .கடுமையான ஓட்டம்.அலைச்சல் தலையில் சுமை சுமத்தல் | மிகு உழைப்பு | மிகு வெப்பம் கடும் வெயிலில் திரிதல் | |
| முக்குற்றம் கூட்டக்கூடிய உணவுகள் | | | | மந்தம். செரியாமை |
| ஆகார கோளாறு | | | | மலக்கட்டு |
| விடங்கலந்த உணவு | மிகுந்த புணர்ச்சி தோடமுண்டாக்க கூடிய எண்ணை நீராடியபின் பெண் புணர்ச்சி | | | தேகத்தில் விடப் புழுக்கள் உட்சென்று துளைத்தல் |
| அதிக நீர் அருந்துதல் | கருவி காரணாதிகளின் கவலை, பயம், கோபம், கெட்ட எண்ணம் கொள்ளர் உள்ளம் மாறுபாடடைதல் | | | |
| இலை சருகு ஊறிய நீர் அருந்துதல் | பனியில் திரிதல் மிகுந்த குளிர்ச்சிமழையில் நனைதல அதிகமாக நீராடுதல் | | | |
| | தூக்கமின்மை பசியை அடக்கல் மல மூத்திரம் அடக்கல் | | | |
| | அதிகமாக எண்ணை நீராடுதல் | | | |
| | துர்நாற்றமுள்ள வியர்வை | | | |
| | அடிபடல், அடிதடியால் உடல் நோதல் | | | |
| | நாடுகளின் வேற்றுமை | | | |
| | கதறிக் கூவல் | | | |
| | எண்ணை தேய்த்து ஸ்நானம் செய்தபின் எண்ணை போகாமை | | | |
| | புகையிலை போடுதல் | | | |
| | பகல் நித்திரை | | | |
| | படுக்கை வேறுபடல் | | | |

எல்லா நூல்களிலும் கூறப்பட்ட காரணங்களைப் பார்க்கும் போது மாறுபட்ட அன்னபானாதிகளாலும் தவறான நடைமுறைகளாலும் வாத பித்த

கபங்களில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுவதால் சுரம் உண்டாகின்றது. உதாரணமாக மிகுந்த நடை, கடுமையான ஓட்டம், அலைச்சல், தலையில் சுமை சுமத்தல், மிகுந்த புணர்ச்சி தோடமுண்டாக்க கூடிய எண்ணை நீராடியபின் பெண் புணர்ச்சி போன்ற காரணங்களால் உடலிலுள்ள 7 உடற் தாதுக்களாகிய இரச (அளவுக்கு அதிகமான வியர்வை வெளியேறுவதால்,அதிகமான விந்து வெளியேறுதல் (ஷீணிக்கப்படுவதால்) வாதம் தன்அளவில் மிகுதியடைகின்றது. எனவே இதனால் வாத சுரம் ஏற்படுகின்றது.

பனியில் திரிதல் மிகுந்த குளிர்ச்சி மழையில் நனைதல் அதிகமாக நீராடுதல் போன்ற காரணங்களால் கபம் அதிகரிக்கின்றது. இதனால் கப சுரம் ஏற்படுகின்றது.

கருவி காரணாதிகளின் கவலை, பயம், கோபம், கெட்ட எண்ணம் கொள்ளல், உள்ளம் மாறுபாடடைதல் போன்ற காரணங்களால் பித்தத்தில் பாசக பித்தம் பாதிப்படைந்து மந்த அக்கினி உண்டாக்கப்படுகின்றது. மந்தாக்கினியால் சமிபாடு பாதிக்கப்பட்டு ஆமம் உருவாக்கப்படுகின்றது. இதையே அகத்தியர் 2000 என்னும் நூலில் ''தேகத்தில் சாப்பிட்ட உணவு சீரணமாகாமல் ஆமதோஷமாகி வயிற்றிலுள்ள ஜாடராக்கினியை வெளியேவீசச் செய்யும். அப்போது தொட்டால் சுரம் காயும் என கூறப்படுகின்றது''.

இதனையே ''பயத்தால் சுரம் ஏற்பட்டது'' என முன்னோர் கூறுவர்.

## சுரத்தின் வகைகள்

182 வகை சுரங்கள் ஆய்வுக்காக எடுக்கப்பட்ட 13 நூல்களில் இருந்து இனங்காணப்பட்டுள்ளது. எல்லா வகைகளும் எல்லா நூல்களிலும் காணப்படவில்லை. இவற்றின் தொகுப்பு அட்டவணை 2 இல் காட்டப்பட்டுள்ளது.

1. வளி சுரம்
2. வளி அழல் சுரம்
3. வளி ஐய சுரம்
4. அழல் சுரம்
5. அழல் வளி சுரம்
6. அழல் ஐய சுரம்
7. ஐய சுரம்
8. ஐய வளி சுரம்
9. ஐய அழல் சுரம்
10. முப்பிணிச் சுரம்
11. மந்த சுரம்
12. நளிர் சுரம்
13. வெஞ் சுரம்
14. மேனி சுரம்
15. உள் சுரம்
16. உட் சுரம்
17. வெளிச் சுரம்
18. விட்டு வரும் சுரம்
19. விடாச் சுரம்
20. சாரற் சுரம்
21. செங்கரை சுரம்
22. ஊன் சுரம்
23. கொழுப்பு சுரம்
24. என்பு சுரம்
25. மூளைச் சுரம்
26. விந்துச் சுரம்
27. துன்பச் சுரம்
28. முறைச் சுரம்
29. மயக்கச் சுரம்
30. பிதற்றல் சுரம்
31. புழுச் சுரம்
32. மஞ்சற் சுரம்
33. காலைச் சுரம்
34. இராச் சுரம்
35. அதி காலை சுரம்
36. நடுக்கற் சுரம்
37. பகற் சுரம்
38. மாலை சுரம்
39. தீவரற் சுரம்
40. வேனற் சுரம்
41. கொட்டாவி சுரம்
42. விக்கற் சுரம்
43. ஏப்பச் சுரம்
44. வியர்வை சுரம்
45. தூங்காச் சுரம்
46. இருமல் சுரம்
47. கட்டி சுரம்
48. சீழ்கொள்ளும் சுரம்
49. பழஞ் சுரம்
50. வீக்க சுரம்
51. கழிச்சற் சுரம்
52. வாந்தி சுரம்
53. மோது சுரம்
54. நாவேறு சுரம்
55. ஏவற் சுரம்
56. பூத சுரம்
57. மருந்து வேகச் சுரம்
58. நஞ்சு சுரம்
59. சினச் சுரம்
60. பயச் சுரம்
61. வருத்தச் சுரம்
62. காமச் சுரம்
63. தெய்வசினச் சுரம்
64. சேர்க்கை சுரம்.

மேற்கூறிய 64 சுரங்கள் சித்த மருத்துவம் - பொது, நோய்நாடல் நோய்முதல் நாடல் திரட்டு எனும் இரண்டு நூல்களிலும் கூறப்பட்டுள்ளது. நோய்நாடல் நோய்முதல் நாடல் திரட்டு எனும் நூலில் சீழ்கொள்ளும் பல்கொப்பள சுரம் ஒரு வகையாக கூறப்பட்டுள்ள போதும் சித்த மருத்துவம் - பொது எனும் நூலில் சீழ்கொள்ளும் சுரம், பல்கொப்பள சுரம் என இரண்டு வகைகளாக கூறப்பட்டுள்ளது.நோய்நாடல் நோய்முதல் நாடல் திரட்டு எனும் நூலில் கூறப்பட்டுள்ள உள்ளச் சுரம் சித்த மருத்துவம் - பொது எனும் நூலில் கூறப்படவில்லை.

வைத்திய சாரசங்கிரகம் எனும் 64 வகைச்சுரங்களில் உள்ள வளி சுரம், வளி ஐய சுரம், அழல் சுரம்,ஐய சுரம், முப்பிணிச் சுரம் என்பவற்றிற்குப்பதிலாக வாத சுரம், பித்த சுரம் சிலேத்ம சுரம், வாதசிலேத்ம சுரம்,சன்னிவாத சுரம் என்ற பெயர்களுடனும் மாந்த சுரம், நளிர் சுரம், உட் சுரம், விட்டு விட்டு வரும் சுரம், விடா சுரம், ஊன் சுரம், முறை சுரம்,இராச் சுரம், பழஞ் சுரம், கழிச்சற் சுரம், நஞ்சு சுரம் என்பவற்றுடன் மேலதிகமாக கீழுள்ள வகைகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

கணக்காய்ச்சல் சுரம்
உடம்பு நோய் சுரம்
ஆம சுரம்
இரத்த சுரம்
அன்னபனாதி சுரம்
மாங்கிஷ சுரம்
அட்சர மாந்த சுரம்
சீதவிச சுரம்
குளிர் சுரம்
தாப சுரம்
சன்னிவாத சுரம்
அஜீரண சுரம்
அத்தி சுரம்
சீத சுரம்

வெங்கட்ராஜன் எழுதிய தன்வந்திரி வைத்தியம் எனும் நூலில்சுரத்தின் வகைகளாக , சுரபாத சுரம், சாதுர்திக சுரம், வாதவத்தீ சுரம், சங்கிரக அஸ்தி சுரம்,முழுத்த சுரம் பித்த அதிசார சுரம் கூறப்பட்டுள்ளது. இவற்றுடன் இந்நூலில் வளி அழல் சுரம் (வாத பித்த) வளி ஐய (வாத சிலேட்டும) சுரம் முறைச் சுரம், வேனற் சுரம், நஞ்சு சுரம், அழல் ஐயசுரம (பித்த சிலேட்டும்) என்பன 64 வகைச் சுரங்களின் வகைகளில் உள்ளடக்கப் பட்டுள்ளது.அத்துடன் ஆம சுரம், சன்னிவாத சுரம், அத்தி சுரம் போன்றவை வைத்திய சாரசங்கிரகம் எனும் நூலில் கூறப்பட்டுள்ளதுடன் ஒத்துள்ளது.

வாத சோக சுரம்
பித்த சோகை சுரம்
வாத வைசூரி சுரம்
சய சுரம்
ரதாப வாத சுரம்
சாதுர்திக சுரம்
வாதவத்தீ சுரம்
சங்கிரக அஸ்தி சுரம்
வாத சோக சுரம்
பித்த சோகை சுரம்
சய சுரம்
பிரதாப வாத சுரம்
வாதமாசீத சுரம்
வாத கன சுரம்
நானாளை மாறற் சுரம்
வாத மாந்த கண சுரம்
பித்த இரத்த சுரம்
சிலேற்பன ஆம சுரம்
சிலேற்பன அதிசார சுரம்
சிலேற்பன சன்னி சுரம்
சிலேற்பன சுரம்
சிலேற்பன கண சுரம்
சிலேற்பன சீத சுரம்
பித்த சோக சுரம்
ஆகிக சிலேற்பன சுரம்
விச சிலேற்பன சுரம்
கப பஞ்சாகீக சுரம்
சீலேத்ம மாகீக சுரம்

பித்த பிரதாப சுரம்
சிலேற்பன மோக சுரம்
சலா சயச் சுரம்
சிலேற்பன தோச சுரம்
ஆம சிலேற்பன சுரம்
சிலேற்பன விக்குருதி சுரம்
சிலேற்பனஷபஞ்வாகிசுரம்
மாங்கிசபிரதாப சுரம
வாத அதிசார சுரம்
வாத அசீரண சுரம்
வாத உதிரச் சுரம்
மாங்கிச சூரிச் சுரம்
பித்தவிட சுரம்
பித்த அத்தி சுரம்
பித்த அதிசார சுரம்
பித்த மாறற் சுரம்
பித்த அசீரண சுரம்
பித்த சிலேற்பன சுரம்
அசாத்த சுரம்
பித்த சன்னி சுரம்
பித்த சீத சுரம்
பித்த இரத்த சுரம்
பித்த இர்தப் பிரதாப சுரம்
பித்த விரண சுரம்

வகைகள் செகராசசேகரம் வைத்திய திறவுகோல் எனும் நூலில் சுரத்தின் வகைகளாக கூறப்பட்டுள்ளது. இவற்றுடன் இந்நூலில் வாத சுரம், வளி அழல் சுரம் (வாதபித்த), வளி ஐய சுரம (சீதவாத), அழல் சுரம(பித்த), அழல் வளி சுரம் (பித்த வாதம்),அழல் ஐய சுரம (பித்த கபம்), ஐய சுரம (கப சுரம்), ஐய வளி சுரம (வாத கப சுரம்) ஐய அழல் சுரம், முப்பிணி சுரம் (மூன்று தோச சுரம்) மந்த சுரம், கழிச்சற் சுரம், பூத சுரம், நஞ்சு சுரம் என்பன 64 வகைச் சுரங்களின் வகைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அத்துடன் அம்மை சுரம், சன்னி பாத சுரம், அஜீரண சுரம், அத்தி சுரம், பிரேத சுரம், சோக சுரம், ஆகிக வாத சுரம் சுரபாத சுரம்விரண சுரம், வாதவத்தி சுரம், அன்னபனாதி சுரம் என்பன தன்வந்திரி வைத்தியம் எனும் நூலில் சுரத்தின் வகைகளாக கூறப்பட்டுள்ளது.

சிலேற்பன நீர் தோச சுரம்
சிலேற்பன பிரமேக சுரம்
சிலேற்பன நாலா மாறற் சுரம்

வாதத்திற் சன்னி பாத சுரம்
பித்த இரத்த பிரமேக சுரம்
சிலேற்பன அத்தி சுரம்
மாங்கிசபிரதாப சுரம்
விரன வாத சுரம்
பித்த தாக சுரம்

மாங்கிச அதிசார சுரம்
சிலேற்பன தொந்த
அதிசார சுரம்
நீருதிரி சுரம்
சிலேற்பன பிரதாப சுரம்
சிலேற்பன சோக சுரம்
சிலேற்பன தொந்த சுரம்
சிலேற்பனசன்னி பாத சுரம்
தோலை பற்றிய சுரம்
தலையை பற்றிய சுரம்
தசையில் விட சுரம்
சீத வாத சுரம்
சுக்கல தாது கத சுரம்

பித்த விச சிலேற்பன அத்தி சுரம்
பித்த சய சுரம்
இரத்த பித்த உதிர் சுரம்
கர பாத பித்த சுரம்
பித்த பிரமேக சுரம்
பித்த இரத்த அத்சார சுரம்
ப்த்த மேக சுரம்
சிலேற்பன சய சுரம்
சிலேற்பன மாங்கிச உதிர் சுரம்

இவ்வகைகள் பரராஜசேகரம் சுரரோக நிதானம் என்னும் நூலில் சுரத்தின் வகைகளாக கூறப்பட்டுள்ளது. இத்துடன் செகராசசேகரம் வைத்திய திறவுகோல் என்னும் நூலில் கூறப்பட்ட

வாத சோக சுரம்
பித்த சோகை சுரம்
வாத அத்தி சுரம்
வாதமாசீத சுரம்
வாத கன சுரம்
நானாளை மாறற் சுரம்
வாத மாந்த கண சுரம்
வாத அதிசார சுரம்
வாத அசீரண சுரம்
வாத உதிரச் சுரம்
மாங்கிச சூரிச் சுரம்
பித்தவிட சுரம்
பித்த அத்தி சுரம்
பித்த அதிசார சுரம்
பித்த மாறற் சுரம்

பித்த அசீரண சுரம்
பித்த சிலேற்பன சுரத்தில்
அசாத்த சுரம்
பித்த சன்னி சுரம்
பித்த சீத சுரம்
பித்த இரத்த சுரம்
பித்த இர்தப் பிரதாப சுரம்
பித்த விரண சுரம்
பித்த இரத்த சுரம்
சிலேற்பன ஆம சுரம்
சிலேற்பன அதிசார சுரம்
சிலேற்பன சன்னி சுரம்
சிலேற்பன சுரம்
சிலேற்பன கண சுரம்
கப பஞ்சாகீக சுரம்

இவ் வகைகள் பரராசசேகரம் சுரரோக நிதானம் என்னும் நூலிலும் கூறப்பட்டுள்ளது. அத்துடன் இரத்த சுரம், பிரேத சுரம், விரண சுரம் ஆகியவை வைத்திய சார சங்கிரகம் என்னும் நூலிலும் கூறப்பட்டுள்ளது. வளி சுரம(வாத), வளி அழல் சுரம(வாத பித்த), வளி ஐய சுரம்(சீதவாத), அழல் சுரம(பித்த), அழல் வளி சுரம(பித்த வாதம்), அழல் ஐய சுரம்(பித்தசிலேற்பன), ஐய வளி சுரம(சிலேற்பன வாதம), ஐய அழல்

சுரம(சிலேற்பன பித்தம்,சிலேற்பன சுரம் மந்த சுரம், பூத சுரம், மூளை சுரம் என்பன 64 வகை சுரங்களுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

சுக்கல தாது கத சுரம்
அபிகாத சுரம்
சங்கம தோச சுரம்
கிருமி சுரம்
சுராதி சார சுரம்
இரத்தாதி சார சுரம்
அம்மை சுரம்
சந்நிபாத சுரம்
சீத சுரம்

இவை அனுபோவ வைத்திய பிரம்ம ரகசியம் என்னும் நூலில் சுரத்தின் வகைகளாக கூறப்பட்டுள்ளது. அத்துடன்வளி சுரம் (வாத), வளி அழல் சுரம் (வாதபித்த), வளி ஐய சுரம் (வாதசிலேஷ்ம்), அழல் சுரம் (பித்த), ஐய சுரம் (சிலேஷ்ம்), பயச் சுரம் ,காம சுரம்,ஐய அழல் சுரம் (சிலேஷ்ம் பித்தம்), முறை சுரம், மஞ்சற் சுரம், வேனற் சுரம், வாந்தி சுரம், பூத சுரம், நஞ்சு சுரம் என்பன 64 வகை சுரங்களுள் உள்ளெடுக்கப்பட்டுள்ளது. இவை தவிர சோக சுரம், அஜீரணசுரம் என்பன வைத்திய சார சங்கிரகம் என்னும் நூலிலும் கூறப்பட்டுள்ளது. அத்துடன் ஆகாந்துவ சுரமும் மேலதிக வகையாக இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அம்மை சுரம்
சன்னிபாத சுரம்
சப்த சுரம்
அல்ப சுரம்
புனரா வர்த்தி சுரம்

விஸ்போடகசுரம் இவை அகத்தியர் குணவாகடம் என்னும் நூலில் சுரத்தின் வகைகளாக கூறப்பட்டுள்ளது. அத்துடன் சீத சுரம், அதிசார சன்னிபாத சுரம் என்பன வைத்திய சார சங்கிரகம் என்னும் நூலில் கூறப்பட்ட வகைகளுடன் ஒத்துள்ளது.

சீத விசம சுரம்
பித்த தாது.மேதை தாது கத சுரம்
குலைப்பு சுரம்

மச்சை கத சுரம்
மாமக சுரம்
ஆகாந்துவ சுரம்

இவை அகத்தியர் 2000 என்னும் நூலில் வகைகளாக கூறப்பட்டுள்ளது. அத்துடன் வளி சுரம(வாதம்),வளி அழல் சுரம் (வாத பித்தம்), வளி ஐய சுரம் (வாத கப),அழல் சுரம் (பித்தம்) அழல் ஐய சுரம் (பித்த கபம்) ஐய சுரம் (கப), நஞ்சு சுரம், பூத சுரம், கழிச்சல் சுரம், என்பு சுரம், கொழுப்பு சுரம், முறைசுரம், முப்பிணி சுரம்(வாத பித்த சிலேத்தும்) என்பன 64 வகை சுரங்களுள் உள்ளடுக்கப்பட்டுள்ளது. அனுபோவ வைத்திய பிரம்ம ரகசியம் என்னும் நூலில் வகைகளாக கூறப்பட்டுள்ள அபிகாத சுரம், சுக்கில தாது கத சுரமும், பரராசசேகரம் சுரரோக நிதானத்தில் கூறப்பட்ட வாதத்தில் சன்னிபாத சுரமும் இந்நூலிலும் கூறப்பட்டுள்ளது. வைத்திய சார சங்கிரகம் என்னும் நூலில் கூறப்பட்ட சீத சுரம், பிரேத சுரம், அஜீரணசுரம், சோக சுரம், விரண சுரம், ஆகிக வாத சுரம், ஆம சுரம், இரத்த சுரம் ஆகியவை இந்நூலிலும் கூறப்பட்டுள்ளது.

ஆகீக சுரம், மாறல் சுரம், சர்மத்தை பற்றிய சுரம் என்பன யூகி வைத்திய சிந்தாமணி என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது. இவை தவிர அனுபோக வைத்திய பிரம்ம ரகசியம் என்னும் நூலில் கூறப்பட்ட அபிகாத சுரமும், செகராஜசேகர வைத்திய நூலில் கூறப்பட்ட ஆகிய சிலேற்பன சுரமும், வைத்திய சார சங்கிரகம் என்னும் நூலில் கூறப்பட்ட அஜீரணசுரம், ஆம சுரம், இரத்த சுரம் போன்ற சுரங்களும் இந்நூலிலும் கூறப்பட்டுள்ளது. பூத சுரம், ஊன் சுரம், ஐய சுரம், அழல் ஐய சுரம், வளி சுரம், வளி அழல் சுரம், வளி ஐய சுரம், அழல் சுரம் இவை 64 வகை சுரங்களுள் உள்ளடுக்கப்பட்டுள்ளது.

சரபேந்திர வைத்திய திரட்டு எனும் நூலில் 64 வகை சுரங்களுள் உள்ளடக்கப்பட்ட,வளி சுரம் (வாதம்),வளி அழல் சுரம் (வாத பித்தம்), வளி ஐய சுரம் (வாத கபம்),அழல் சுரம் (பித்தம்), அழல் ஐய சுரம் (பித்த கபம்),ஐய சுரம்(கபம்),கூறப்பட்டுள்ளதுடன், அகத்தியர் 2000 எனும் நூலில் கூறப்பட்ட ஆகந்துவ சுரமும் சன்னிபாத சுரமும் வகைகளாக கூறப்பட்டுள்ளது.

கந்தசாமி முதலியார் எழுதிய வைத்திய சாரசங்கிரகம் எனும் நூலில் சுர வகுப்பு,காய்ச்சல் ரோக படலம் எனும் இரண்டு பகுதிகள் காணப்படுகின்றன. இரண்டிலும் சில வகைகள் பொதுவாக காணப்படுகின்றன.அத்துடன் காய்ச்சல் ரோக படலத்தின் வகைளின் பெயர்களும் சுரம் என்றே முடிவடைகின்றன.

கந்தசாமி முதலியார் எழுதிய வைத்திய சாரசங்கிரகம் எனும் நூலில் சுர வகுப்பு எனும் பகுதியில் கணக்காய்ச்சல் சுரம், உடம்பு நோய் சுரம், ஆம சுரம், இரத்த சுரம், அன்னபனாதி சுரம்,மாங்கிச் சுரம்,அட்சரமாந்த சுரம்,உட் சுரம், நளிர் சுரம், சீத சுரம், பழஞ் சுரம், சீத விச சுரம்,முப்பிணி சுரம்,என்பு சுரம்,மந்த சுரம் எனும் 15 வகையான சுரங்களின் பெயர்கள்

காணப்படுகின்ற போதும் 8 வகையான சுரங்களுக்கு மட்டுமே குணம்குறிகள் காணப்படுகின்றன.

காய்ச்சல் ரோக படலம் எனும் பகுதியில் வளி சுரம(வாத), வளி ஐய சுரம் (வாத சிலேத்தும), அழல் சுரம் (பித்தம்), சன்னி வாத சுரம், உட் சுரம்,மந்த சுரம், என்பு சுரம் இரத்த சுரம், ஊன் சுரம்,நஞ்சு சுரம், விடா சுரம், முறைச் சுரம், குளிர் சுரம், தாப சுரம்,விசபாக சுரம், இரா சுரம், நளிர் சுரம்,ஐய சுரம் (சிலேத்தும சுரம்), அஜீரண சுரம், அதிசார சுரம், திரிதோச சுரம், பழஞ் சுரம் எனும் 24 வகையான சுரங்களின் பெயர்கள் காணப்படுகின்ற போதும் 12 வகையான சுரங்களுக்கு மட்டுமே குணம்குறிகள் காணப்படுகின்றன.

ஆகந்துக சுரம் எனும் வகை சரபேந்திர வைத்திய முறைகள் அகஸ்தியர் இரண்டாயிரம்அனுபோக வைத்தியபிரம்ம ரகசியம் எனும் நூல்களில் கூறப்பட்டு இருந்தாலும் அனுபோக வைத்தியபிரம்ம ரகசியம் எனும் நூலில் மேலும் 4 வகைகளாக பிரிக்கபட்டுள்ளது. அவையாவன ஆகந்துவ சுரம், அபிகாத சுரம், அவிசங்க சுரம்,சாப சுரம்,அபிசார சுரம். இதில் வரும் அவிசங்க சுரம மேலும் 7 வகைகளாக பிரிக்கபட்டுள்ளது. அவை காம சுரம், துக்க சுரம், பூதாவேச சுரம், அவுசாதந்த சுரம், விச சுரம், கோப சுரம், பய சுரம் என்பனவாகும்.

பல நூல்களில் வகைகளின் எண்ணிக்கை வரையறுக்கபட்ட போதும் நூல்களில் இவ்வளவு வகையும் குறிப்பிடப்பட்டு இல்லை. இவை அழிபட்டு இருக்கலாம்.

### தொகுப்பு

பரராசசேகரம் சுரரோக நிதானம்,செகராசசேகரம் வைத்தியத் திறவுகோல் இரண்டு நூல்களிலும் 64 வகைச்சுரங்கள் கூறப்பட்டு அவற்றின் குறிகுணங்கள், சிகிச்சை சாத்தியாஅசாத்தியங்கள் என்பன கூறப்பட்டுள்ளன.

இந்நூல்களின் படி சுரரோகமானது வாதத்தால் 20 வகையும், பித்தத்தால் 24வகையும், கபத்தினால் 20 வகையுமாக பிரிக்கப்பட்டு மொத்தமாக 64 வகை கூறப்பட்டுள்ளது.

வாதத்தினால் உண்டாகும் 20 ல்
சாத்தியம் - 12
ஆசாத்தியம்- 8
பித்தத்தினால் உண்டாகும் 24 சுரங்களில்
சாத்தியம் - 10
அசாத்தியம் - 14

கபத்தினால் உண்டாகும் 20 வகைச்சுரங்களில்
சாத்தியம் - 10
அசாத்ததியம் - 10

**பரராசசேகரம் சுரரோகநிதானம், செகராசசேகர வைத்தியத் திறவுகோல் நூல்களின் படி சுரங்களின் வகைகள் 64ன் விபரம்**

| **வாதத்தினால் உண்டாகும் சுரங்கள்** | | **பித்தத்தினால் உண்டாகும் சுரங்கள்** | | **கபத்தினால் உண்டாகும் சுரங்கள்** | |
|---|---|---|---|---|---|
| **சாத்தியம்(12)** | **அசாத்தியம்(8)** | **சாத்தியம்(10)** | **அசாத்தியம்(14)** | **சாத்தியம் (10)** | **அசாத்தியம்(10)** |
| வாதம் | வாதசிலேற்பனம் (வாதகபக) | பித்தம | பித்தசிலேற்பன (பித்தகபம்) | சிலேற்பன பித்த | சிலேற்பன சுரம் |
| வாதபித்தம் | வாதத்தில் சன்னி பாதம (சன்னிபாதம்) | பித்தவாத | பித்த சன்னி | சிலேற்பன வாத | சிலேற்பன சன்னி சுரம் |
| சீதவாதம் | பூத | பித்தசிலேற்பன(பித்தகப) | பித்த சீதம் | சிலேற்பன சயம் | மாங்கிச அதிசாரம் |
| வுாத அத்தி | பிரேதம | பித்த தாக(பித்தசுரம்) | பித்த சயம்(சய சுரம்) | சிலேற்பன மாங்கிசம் | சிலேற்பன தொந்த |
| வுாதமா சீத | மாங்கிஷ பிரதாப | பித்த விடம (விடம) | இரத்தபித்த உதிரிச் சுரம்(வைசூரி) | சிலேற்பன கண | நீர்உதிரி |
| வாதகண | மாங்கிச வசூரி(வைசூரி) | பித்த அத்தி (அத்தி) | குரபாத(சுரபாதம் | சிலேற்பன நீர்தோஷம் | சிலேற்பன பிரதாப |
| நாநாளை மாறற் சுரம் | சோக | பித்த விஷசிலேற்பனம் (பித்தசோக) | பத்தஇரத்த(இரத்த பித்த) | சிலேற்பன அத்தி சுரம் | சிலேற்பன கண சுரம் |
| மாந்த சுரம் | விரணவாத | பித்த அதிசார(அதிசார பித்த) | பித்தபிரமேக(பித்த பிரதாப) | சிலேற்பன அதிசாரசுரம் | சிலேற்பன சோக சுரம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வாத மாந்த கண (மந்த) | | பித்த மாறல் | பித்தஇரத் தபிரதாப | சிலேற்பன பிரமேன சுரம் | சிலேற்பன தொந்த சிலேற்பன |
| வாதஅதிச ார சுரவதிசார ம்) | | பித்த அசீரண (அசீரண) | பித்தவிர ண | சிலேற்பன நாலா மாறல் | சிலேற்பன சன்னிபாத |
| வாதஅஜீர ணம் (அஜீரண) | | | பித்தஇரத் த அதிசார | | |
| வாததிரி சுரம்(உதிரி வாத) | | | பித்த விட | | |
| | | | பித்த மேக | | |
| | | | பித்தஇரத் த பிரமேக | | |

மேற்கூறிய 64 சுரங்களில் 32 வகைகள் சாத்தியம் எனவும் 32 சுரங்கள் அசாத்தியம் எனவும் கூறப்பட்டுள்ளது. பரராசசேகரம சுரரோக நிதானத்தில் இந்த 64 வகையைத்தவிர உடற்தாதுக்களைப்பற்றி வரும் சுரங்களாக 7 வகைகள் குறிகுணங்களுடன் கூறப்பட்டுள்ளன.

1. மூளைச்சுரம் பித்தத்தாலும்
2. தோலைப்பற்றிய சுரம் சிலேற்பனத்தாலும்
3. தலையைப்பற்றிய சுரம் வாதத்தாலும் உருவாவது
4. தசையில் விடசுரம்
5. இரத்தத்தைப்பற்றிய சுரம்
6. அத்தி சுரம்
7. சுக்கில சுரம் என்பனவாகும்.

சித்தமருத்துவம் பொது, நோய்நாடல் நோய்முதனாடல் திரட்டு என்னும் இரு நூல்களிலும் வேறு வகையான 64 வகை சுரங்கள் கூறப்பட்டுள்ளது. இந்நூலில் வாத, பித்த, சிலேற்பன என்னும் பெயர்கனை வளி அழல் ஐயம் என்னும் பெயர்களுடன் பரபராசசேகரத்திலுள்ள அதே பாடல்கள் கூறப்பட்டுள்ளது.

| பரராசசேகரம் | சித்தமருத்து வம் பொது | பாடல் அடிகள் | | |
|---|---|---|---|---|
| 1. வாத சுரம் | வளிச்சுரம் | வாதசுரத்தின் குணம் உரைக்கின்…… | | |
| 2. வாதபித்த | வளி அழல் | வாதபித்தசுரமானால் வருத்துங் குணத்தை வகுத்திடுவன்…… | | |
| 3. வாதசிலேற் பனசுரம் | வளி ஐய சுரம் | உதையுங் கபமும பொங்கி யுவாந்தியுண் மூச்சுமுண்டாய்ப்…… | | |
| 4. பித்த சுரம் | அழல் | பித்த சுரத்தின் குணங்கேளீர் பிதற்றிப்……. | | |
| 5. பித்த வாத சுரம் | அழல் வளி | அந்தப் பித்த மதுவிரண்டும் வாதமொன்றுஞ்…… | | |
| 6. பித்த சேற்பன | அழல் ஐய | பித்தசேற்பனசுரத்தைப் பேசுவன் மனந்த ளர்ந்து…… | | |
| 7. சிலேற்பன சுரம் | ஐய சுரம் | வெய்யசுரந் தனிலிருமல் துரப்பு விக்கல்………… | | |
| 8. சிலேற்பன வாதம் | ஐய வளி | தலையை மிகவு நடுக்குவதுதுஞ் சரீர முழுதும்……… | | |
| 9. சிலேற்பன பித்தம் | ஐய அழல் | **"வெப்பொடு வேர்வை யுண்டாய் வெளுப்பது……."(பரராச)" செப்பாகு முலை மடவீர் சேத்மபித்த சுரச்செயல்கேள்….."(சி.ம) | | |

இரண்டு விதமான 64 வகைச்சுரங்கள் வெவ்வேறு நூல்களில் கூறப்பட்ட போதும் அட்டவணையில் காட்டப்பட்ட 9 வகைச்சுரங்களின் குறிகுணங்கள் பரராசசேகரம் சுரரோகநிதானத்தில் கூறப்பட்ட பாடல்களும் சித்த மருத்துவம் பெது என்னும் நூலிலும் கூறப்பட்டுள்ளது.

** - சிலேற்பன பித்த சுரம் பரராச சேகரத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

தலையை மிகவு நடுக்குவதுஞ் சரீர முழுதும் விறைப்பதுவும்
அலையு மிரும றோன்றுவது மங்கை யொடுகால் குளிர்வதுவும்
குலையுஞ் சுரத்தி லிக்குணங்கள் கூடுங்க பத்தில் வாதமென
மலையின் முனிவ னாராய்ந்து வகுத்தா னாயுள் வேதமதே.

சித்தமருத்துவம் பொது என்னும் நூலில் இதே குணங்குறிகளை பின்வரும் பாடல் மூலம் கூறியுள்ளார்.

“செப்பாகு முலைமடவீர்
சேத்மபித்த சுரச்செயல்கேள்
வெப்பாகும் வியர்வையுமாய்
வெந்துறுநா வதுவெறுக்கும்
தப்பாது அடைந்திருக்கும்
தொண்டை கட்டி நாக்கசக்கும்
அப்பாருமஞ் சடைமுடியா
றைந்திடுமா யுண்மறையே”

## சுரத்தின் வகைகளும் குறிகுணங்களும்

### 01.வாத சுரத்தின் குணம் குறிகள்

10 நூல்களில் கூறப்பட்ட வாத சுரத்தின் 35 குறிகுணங்களும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.1 ல் காட்டப்பட்டுள்ளது.

1 உடல் நடுக்கம்
2 சுரம் கூடி குறையும்
3 வறட்சி - கழுத்து உதடு
4 நித்திரையின்மை
5 தும்மல் இன்மை
6 அவயவங்களில் நைப்பின்மை
7 தலை இதயங்களில் வலி
8 அரோசகம்
9 மலச்சிக்கல்
10 கொட்டாவி
11 உடல் கருமை
12 தேகதத்தில் வெப்பம்
13 தாகம்
14 குளிர்
15 தலைவலி
16 மந்தம்
17 உடல் வெளுத்தல்
18 சினம்
19 நெஞ்சு நோ
20 விக்கல்
21 வாந்தி
22 கை, கால் பொருத்தில் நோ
23 முகம் மினுமினுக்கும்
24 கண் நீல நிறமாகும்
25 உடல் வலி
26 பற்கூச்சம்
27 பசியின்மை
28 இருமல்
29 வயிற்று பொருமல்
30 நடுக்கம்
31 வாய்நீரூறும்
32 பயம்
33 உடல் எரிச்சல்
34 நமைச்சல்
35 மூர்ச்சை

**பரராசசேகர சுரரோக நிதானத்திலுள்ள வாதசுரத்தின் குணம் குறிகள் “வாதசுரத்தின் குணமுரைக்கின் மயிர்க்கூச்செறிதலுடல்……..என்னும் பாடல் மூலம் தரப்பட்டுள்ளது.**

**02.வாத பித்தசுரத்தின் குணம் குறிகள்**

வாத பித்த சுரத்தைப் பற்றி 9 நூல்களில் கூறப்பட்டுள்ளது. இவற்றின் குறிகுணங்கள் 36 தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.2 ல் காட்டப்பட்டுள்ளது.

1 தலைவலி
2 மயக்கம்
3 வாந்தி
4 தாகம்
5 கழுத்து வாய் வரட்சி
6 சோம்பல்
7 மூட்டுகளி வலி
8 நித்திரை பங்கம்
9 நாவரட்சி
10 மயிர் கூச்சல்
11 கொட்டாவி
12 வேகமான பேச்சு
13 வாய் பிதற்றல் மயக்கத்தில் நிற
14 வேற்றுமை
15 வாயில் கைப்பு
16 சுவை குறைதல்
17 உடல் தளர்தல்
18 பெருமூச்சு
19 காதடைத்து இரையும்
20 மஞ்சல் நா, கண்
21 வாய்வு மிகும்
22 சுரம்
23 தேகம் குளிரும்
24 உடல் பலம் குறையும்
25 தும்மல்
26 உடல் வலி நடுக்கம்
27 வயிறு கழிதல்
28 வியர்வை
29 கண் தூங்கும்
30 உடல் எரிச்சல்
31 கருமை நிற நா
32 தோல்பட்டை கூனும்
33 பிரம்மை
34 தொண்டை கரகரப்பு
35 உணவு விருப்பமின்மை
36 தலைபாரம்

**03.வாத கபசுரத்தின் குணம் குறிகள்**

10 நூல்களில் கூறப்பட்டவாதகபசுரத்தின் குறிகுணங்கள் 40 ஆக தொகுத்து பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.3 ல் காட்டப்பட்டுள்ளது.

1 உஷ்ணம்- கூடி,குறைதல்
2 அரொசகம்
3 மூட்டு வலி தலை வலி

4 மூக்கு ஒழுகுதல்
5 பெருமூச்சு
6 இருமல்
7 மலமந்தம்
8 திமிர்த்தல்
9 பிதற்றல் வாய்
10 பார்வை குறைவு
11 நாக்கில் வெழுப்பு
12 மயக்கம்
13 சோம்பல்
14 வீக்கம்
15 கழுத்துப்பிடிப்பு
16 வியர்வை குறை
17 ஈளை
18 இளைப்பு
19 தூக்கம்
20 வெய்யிலை விரும்புதல்
21 மலமும் நீரும் வெளுத்தல்
22 கண்வெளுத்தல்
23 விடா சுரம்
24 வாந்தி
25 தொண்டை நோ
26 உடல் நோ
27 விக்கல்
28 மயிர் கூச்சல்
29 நாவரட்சி
30 வாய் நீருறல்
31 காதடைப்பு
32 குளிர் நடுக்கம்
33 நித்திரை
34 பல் கடித்தல்
35 நாபி தடிப்பு
36 இருமல்
37 வியர்வை அதிகமாகும
38 முகம் வற்றல்
39 நித்திரையின்மை
40 வாய் தித்திக்கும்

### 04.பித்த சுரத்தின் குணம் குறிகள்

9 நூல்களில் கூறப்பட்ட பித்த சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது(40). இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.4 ல் காட்டப்பட்டுள்ளது.

1 உடல் எரிச்சல்
2 பிதற்றல்
3 வாயில் உறைப்பு சுவை
4 மூக்கு வாய் - வேக்காளம்
5 குளிர்ச்சியில விருப்பம்
6 மயக்கம்
7 மூர்ச்சை
8 திமிர்ப்பு
9 சோம்பல்
10 பேதி
11 பித்த வாந்தி
12 வாந்தி இரத்தம்

13 சிவப்பு நிறமான தடிப்பு
14. மூச்சு வாங்கல்
15. கண் சிவப்பு
16 நடுக்கம்
17 இளைப்பு
18 சுவை இன்மை
19 அறிவு கெடும்
20 வாய் கசப்பு
21 நித்திரை
22 எரு நீர் மஞ்சள் நிறமடைதல்
23 மனக்கலக்கம்
24 ஓங்காளம்
25 குளிர்
27 தொண்டை புண்
37 வாய் தித்திப்பு
38 நாக்கு புண்ணாகுதல்
39 புளி ஏப்பம்
40 முகம் கருநிறம்
41 பசியின்மை
42 உடல் வீக்கம்
43 மல கட்டு
44 வாய் தித்திப்பு
45 நாக்கு புண்ணாகுதல்
46 புளி ஏப்பம்
47 முகம் கருநிறம்

**05.பித்த வாத சுரத்தின் குணம் குறிகள்.**

நான்கு நூல்களில் கூறப்பட்ட பித்தவாத சுரத்தின் குறிகுணங்கள் 18 ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல்ஆய்வின் விபரம் அட்டவணை 3.5ல் காட்டப்பட்டுள்ளது.

1.சுரம் கூடுதல்
2. உடல் மஞ்சள்
3. வயிறு பொருமல்
4. மந்தம்
5. கண்நோ
6. குளிர்
7. தேகவரட்சி
8. ஒளிகுன்றல்
9. மயக்கம்
10.தாகம்
11.வெயிலை விரும்புதல்
12.கண்வெளுப்பு/ சிவப்பு
13.நெஞ்செரிவு
14. வாந்தி
15.படுக்கையில் புரளல்
16. கீல்களில் வேதனையுடன் உளைவு
17.உடல் எரிச்சல்
18.நடுக்கம்

## 06.பித்த கப சுரத்தின் குணம் குறிகள்

8 நூல்களில் கூறப்பட்ட பித்த கப சுரத்தின் 29 குறிகுணங்களும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.6 ல் காட்டப்பட்டுள்ளது.

1 உடம்பு திமிர்தல்
2 வியர்வை

3 அழற்சி
4 நாவறட்சி
5 இருமல்
6 கபம் வெளியேறும்
7 மயக்கம்
8 சோம்பல்
9 வாயில் கைப்புச்சுவை
10 பிதற்றல்
11 மார்பு வலி
12 துலைவலி
13 மிகு சுரம்
14 உடல் வற்றல்
15 மன தளர்ச்சி
16 மல சலம் - மஞ்சள்
17 நிததிரையின்மை
18 பெருமூச்சு
19 விக்கல்
20 காதிரைச்சல்
21 உடல் வீக்கம்
22 நீர் வேட்கை
23 கழித்தல்
24 வாய் பிதற்றல்
25 கண் வெளிறல்
26 உடல் எரிச்சல்
27 கண் சிவக்கும்
28 வாய் கறுக்கும்
29 மல சிக்கல்

**07.கப சுரத்தின் குணம் குறிகள்**

8 நூல்களில் கூறப்பட்ட கப சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்துக் 35 ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.7 ல் காட்டப்பட்டுள்ளது.

1 அரோசகம்
2 உடம்பு திமிர்தல்
3 சுரோதஸ் தடைப்படல்
4 வாயில் உமிழ்நீர்சுரத்தல்
5 வாயில் இனிப்பு சுவை
6 மார்பில் சளிகட்டல்
7 மேல் மூச்சு வாங்கல்
8 மூக்கு நீர் ஒழுகுதல்
9 இதயம் படபடப்பு
10 வாந்தி
11 இருமல்
12 தோலில் குளிர்ச்சி
13 உஸ்ணத்தில்விருப்பம்
14 நமைச்சல்
15 சரீரம் மஞ்சள்
16 மந்தாக்கினி
17 வியர்வை
18 தலைவலி
19 வீக்கம்
20 சோம்பல்
21 உடம்பு பாரம்
22 கண் வெளுப்பு
23 மயிர் சிலிர்த்தல்
24 மயக்கம்
25 விக்கல்
26 தாகம்
27 அரோசகம்
28 கழிச்சல்
29 சீத பேதி
30 உடல் வெண்ணிறம்
31 நாவறட்சி
32 தலை நீர் கோத்தல்
33 நாடி துடிக்கும்

## 08.கப வாத (ஐய வளி) சுரத்தின் குணம் குறிகள்

5நூல்களில் கூறப்பட்ட கப வாத சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 10ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.8 ல் காட்டப்பட்டுள்ளது.

1. மிகுந்தசுரம்
2. நடுக்கம்
3. உடல் விறைப்பு
4. சுவையின்மை
5. கை கால் குளிரல்
6. உடல் நிறம் கெடுதல்
7. பெரு மூச்சு
8. கோழை கக்கல்
9. உடல் சோர்வு
10. இனிப்பு புளிப்பில் விருப்பம்

## 09 கப பித்த சுரத்தின் குணம் குறிகள்

4 நூல்களில் மாத்திரமே கூறப்பட்ட கப பித்த சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 14 ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.9 ல் காட்டப்பட்டுள்ளது.

1. மிகுந்த சுரம்
2. நா வெந்துலர்தல்
3. கைத்தல்
4. உணவில் வெறுப்பு
5. கோழை வாந்தி
6. இருமல்
7. பெரு முச்சு
8. குருதி வெளியேறல்
9. தொண்டை கட்டுதல்
10. கண் சிவத்தல்
11. மனம் தளருதல்
12. கை கால் வலி
13. கண் பஞ்சடைதல்
14. பிதற்றல்

## 10 முப்பிணி சுரத்தின் குணம் குறிகள்

4நூல்களில் மாத்திரமே கூறப்பட்டமுப்பிணி சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 16ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.10 ல் காட்டப்பட்டுள்ளது.

1. பிதற்றல்
2. வாந்தி
3. பிரமை
4. நாவறட்சி
5. தாகம்
6. வியர்வை
9. மார்பு துடித்தல்
10. கண் எரிதல்
11. வயிறு வலி
12. இருமல்
13. வாயில் கசப்பு
14. கால் வலி

7. குளிர் 15 கண்,உ தடு கறுத்தல்
8. நடுக்கல் 16பசி

**11.மந்த சுரத்தின் குணம் குறிகள்**

6நூல்களில் மாத்திரமே கூறப்பட்டமந்த சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 20 ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.11 ல் காட்டப்பட்டுள்ளது.

1. வயிற்று மந்தம்
2. தொண்டை மார்பு வலி
3. புளி ஏப்பம்
4. வாந்தி
5. நீர் வேட்கை
6. பெருமுச்சு
7. வயிற்று பெருமல்
8. சுரம்
9. இழைப்பு
10. விக்கல்
11. நடுக்கம்
12. கழிச்சல்
13. மேல் முச்சு
14. எரிச்சல்
15. மயக்கம்
16. துர்நாற்ற மலம்
17. உடல் மெலியும்
18. இருமல்
19. உடல் சில்லிடுதல்
20. வெளுத்தல்

**12. நளிர் சுரத்தின் குணம் குறிகள்**

3நூல்களில் மாத்திரமே கூறப்பட்ட நளிர்சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 10ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.12 ல் காட்டப்பட்டுள்ளது

01. குளிர் சுரம்
02. மயிர் சிலிர்க்கும்
03. கொட்டாவி
04. குளிர் நடுக்கம்
05. தலை வலி
06. கண்ணீர் வடிதல்
07. பித்த வாந்தி
08. மயக்கம்
09. வாய் பிதற்றல்
10.சுரம்விட்டுவிட்டு வருதல்

**13.வெஞ் சுரத்தின் குணம் குறிகள்**

2 நூல்களில் மாத்திரமே கூறப்பட்டவெஞ் சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 7ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.13 ல் காட்டப்பட்டுள்ளது

1. மூக்கு துளையில் கொப்பளம் வருதல்

2. தலை நோய்
3. கண் சிவப்பு
4. கண் எரிதல்
5. வாய் நீருறல்
6. மயிர் சிலிர்தல்
7. உடல் வன்மை குறைதல்

**14 மேனி சுரத்தின் குணம் குறிகள்**

2 நூல்களில் கூறப்பட்டமேனி சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 8ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.14 ல் காட்டப்பட்டுள்ளது

1 தோல் தடித்தல்
2 உடல் சிவத்தல்
3 உடல் எரிச்சல்
4 வாந்தி
5 கழிச்சல்
6 நமைச்சல்
7 தலைச்சுற்று
8 மயக்கம்

**15.உள்ளச் சுரத்தின் குணம் குறிகள்**

**2**நூல்களில் மாத்திரமேஉள்ளச் சுரம் கூறப்பட்டபோதும் சுரத்தின் குறிகுணங்கள் கூறப்படவில்லை.

**16.உட் சுரத்தின் குணம் குறிகள்**

3 நூல்களில் மாத்திரமே கூறப்பட்ட உட்சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 9ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.15 ல் காட்டப்பட்டுள்ளது

1 உட்புறமாக காயும்
2 மனத்தளர்வு
3 கை கால் ஓய்ச்சல்
4 உணவு வேண்டாமை
5 வாய் குமட்டல்
6 உடல் மெலிதல்
7 வயிறு எரிதல்
8 மயக்கம்
9 மலசலம் தீரும்

## 17 வெளிச் சுரத்தின் குணம் குறிகள்

2 நூல்களில்மாத்திரமே கூறப்பட்ட வெளிச் சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 5ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.16 ல் காட்டப்பட்டுள்ளது

இல. குணம் குறிகள்

1 வெளிப்புறமாக காயும்
2 வாய் கைத்தல்
3 குமட்டல்
4 உணவு செரியாமை
5 நீர் வேட்கை

## 18 விட்டு வரும் சுரத்தின் குணம் குறிகள்

3 நூல்களில் மட்டும் கூறப்பட்டவிட்டு வரும் சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 6ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.17 ல் காட்டப்பட்டுள்ளது

1 விட்டு விட்டு சுரம் வரும்
2 உடல் கறுக்கும்
3 குருதி உறையும்
4 உடல் மெலியும்
5 கை கால் சூம்பும்
6 வயிறு பெருக்கும்

## 19.விடா சுரத்தின் குணம் குறிகள்

3 நூல்களில் கூறப்பட்டவிடா சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 6ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.18 ல் காட்டப்பட்டுள்ளது

1 விடாது சில நாள் காயும்
2 கண் சிவக்கும்
3 நா உலரும்
4 நீர் வேட்கை
5 கை கால் நோ
6 உடல் வன்மைகெடும்

## 20. சாரற் சுரத்தின் குணம் குறிகள்

2 நூல்களில் மட்டும் கூறப்பட்ட சாரற் சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 13ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.19 ல் காட்டப்பட்டுள்ளது.

1 இரச தாதுவை பற்றி வரும்
2 உடல் எரியும்
3 உடல் நோ
4 நீர் வேட்கை
5 தூக்கமின்மை
6. உடல் வன்மை குறைதல்
7. நா சுவையறியாது
8. வாந்தி
9. பெருமூச்சு
10. விக்கல்
11. தலைவலி
12. இளைப்பு
13. வியர்வை

**21.செங்கரை சுரத்தின் குணம் குறிகள்**

2 நூல்களில் கூறப்பட்டசெங்கரை சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 16ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.20 ல் காட்டப்பட்டுள்ளது

1 இரத்ததாதுவை பற்றிய சுரம்
2 உடல் சிவக்கும்
3 மிகுதியான சுரம்
4 நீர் வேட்கை
5 வியர்வை
6 உடல் நோ
7 தோல் கன்றிப்போதல்
8. நா வழுவழுத்தல்
9. மஞ்சள் நிறமாதல்
10 மூட்டு நோ
11 ஐயம் கூடுதல்
12 தலை நோ
13 மூக்குநீர் பாய்ச்சல்
14 வாய் பிதற்றல்
15 கை கால் சில்லிடுதல்
16 அடிக்கடி கழித்தல்

**22.ஊன் சுரத்தின் குணம் குறிகள்**

4 நூல்களில் கூறப்பட்ட ஊன்சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 14ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.21 ல் காட்டப்பட்டுள்ளது.

1 மாமிசதாதுவை பற்றிவரும் சுரம்
2 பெருமூச்சறிதல்
3 உடல் நோ, ஊதல்
4 உதடு உலர்தல்
5 மயிர் கூச்செறிதல்
6 மனக்கலக்கம்
7 கண்ணீர் வடிதல்
8 தோல்மினுமினுத்தல
9 கொட்டாவி
10 விக்கல்
11 மலக்கட்டு
12 வியர்வை
13 உடல் நமைச்சல்
14 மூர்ச்சை

**23.கொழுப்பு சுரத்தின் குணம் குறிகள்**

2 நூல்களில் கூறப்பட்ட கொழுப்பு சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 5ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.22 ல் காட்டப்பட்டுள்ளது.

1 கொழுப்பு தாதுவை பற்றிய சுரம்
2 உணவில் விருப்பமின்மை
3 செரியாமை
4 தலை நோ, புரளல்
5 நடுக்கம்

**24.என்பு சுரத்தின் குணம் குறிகள்**

5 நூல்களில் கூறப்பட்ட என்பு சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 17ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.23 ல் காட்டப்பட்டுள்ளது.

1என்பு பற்றி வரும்
2 நீர் வேட்கை
3 உடல் இழைக்கும் வெழுக்கும்
4 செரியாமை
5 அடிவயிற்றில் நோ
6 கழிச்சல்
7 நரம்பு நோ
8 கீல் நோ
9 கண் மஞ்சள்
10 தலை அசைக்க முடியாமை
11 குளிர்ச்சி
12 அதிக காய்ச்சல்
13 உடல் நடுக்கம்
14 புத்தி பேதலிக்கும்
15 நித்திரை இன்மை
16 உதடு சிவக்கும்

**25.மூளை சுரத்தின் குணம் குறிகள்**

3 நூல்களில் கூறப்பட்ட மூளை சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 16ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.24 ல் காட்டப்பட்டுள்ளது.

1 மூளையை பற்றி உண்டாகும்
2 செரியாமை
3 புளி ஏப்பம்
4 கொட்டாவி
5 விக்கல்
6 வாந்தி
7 உப்பிசம்
9 மனகலக்கம்
10 தலை நடுக்கம்
11 உடல் இழைக்கும் வெழுக்கும்
12 உடல் மெலியும்
13 உடல் நிறம் மாறும்
14 ந்திரியங்களின் செயலை குறைக்கும்
15 நா வறட்சி

8 கழிச்சல்
16 பல்லீற்றில் உதிரம் வடியும்

**26.விந்து சுரத்தின் குணம் குறிகள்**

2 நூல்களில் கூறப்பட்ட விந்து சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 13ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.25 ல் காட்டப்பட்டுள்ளது.

1சுக்கில தாது பற்றிய சுரம்
2 பல் வலி
3 உடல் நோ
4 தலை நடுக்கம்
5 மனகலக்கம்
6 உடல் வெளுக்கும்
7 குருதி வன்மை குறையும்
8 வாய் இனிப்பாய் இருக்கும்
9 பசி இன்மை
10 விக்கல்
11 வாந்தி
12 கழிச்சல்
13 மயக்கம்

**27.துன்ப சுரத்தின் குணம் குறிகள்**

2 நூல்களில் கூறப்பட்ட துன்பசுரத்தின் குறிகுணங்களும் தொகுத்துக் 7ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.26 ல் காட்டப்பட்டுள்ளது.

1 துன்பத்தினால் வரும்
2 மயக்கம்
3 மூர்ச்சை
4 அறிவு கலக்கம்
5 கண் சிவக்கும்
6 வாந்தி
7 கை கால் நடுக்கம்

**28.முறைச் சுரத்தின் குணம் குறிகள்**

6 நூல்களில் கூறப்பட்ட முறை சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 16 ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.27 ல் காட்டப்பட்டுள்ளது.

1 குளிர்ச்சி
2 கை கால் விறைக்கும்
3 கண்எரியும்
4 முறை விட்டு விட்டு வரும்
5 தலை வலி
9பல முறைவரின் மண்ணீரல் கல்லீரல் பாதிப்பு
10 வியர்வை
11 தாகம்
12. மூட்டு விட்டுப்போவது போல் வலி
13. மயக்கம்

6 கீல் நோ
7 நெஞ்சு நோ
8 கொட்டாவி

14 .உடல் நோ
15. வாந்தி
16.இருமல்

**29.மயக்க சுரத்தின் குணம் குறிகள்**

2 நூல்களில் கூறப்பட்ட மயக்கசுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 6ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.28 ல் காட்டப்பட்டுள்ளது

1 தலை சுற்றல்
2 வாந்தி
3 மயக்கம்
4 அறிவு கெடல்
5 வலிப்பு
6 அறிவற்று கிடத்தல்

**30.பிதற்றல் சுரத்தின் குணம் குறிகள்**

2 நூல்களில் கூறப்பட்டபிதற்றல்சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்துக் 6ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.29 ல் காட்டப்பட்டுள்ளது

1 மயிர் சிலிர்த்தல்
2 கண் சிவக்கும்
3 கீல் நோ
4 பிதற்றல்
5 அறிவழித்தல்
6 ஓடித்திரிதல்

**31.புழு சுரத்தின் குணம் குறிகள்**

2 நூல்களில் கூறப்பட்டபுழு சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 4ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.30 ல் காட்டப்பட்டுள்ளது.

1 வயிற்று புழுவால் எற்படும்
2 பெரும்பாலும் குழந்தைகளுக்கு எற்படும்
3 வலிப்பு
4 பெருமூச்சு

**32. மஞ்சள் சுரத்தின் குணம் குறிகள்**

3 நூல்களில் கூறப்பட்டமஞ்சள் சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 6ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.31 ல் காட்டப்பட்டுள்ளது.

1 விடா சுரம்
2 உடல் மஞ்சள்
3 பித்த வாந்தி
4 குருதி வன்மை குறையும்
5 உடல் ஊதும்
6 மலம் மூத்திரம் மஞ்சளாகும்

33.**காலைச் சுரம்**
2 நூல்களில் மட்டுமே கூறப்பட்ட போதும் குறிகுணங்கள் கூறப்படவில்லை.

**34.இராச் சுரம்**
3 நூல்களில் கூறப்பட்ட போதும் குறிகுணங்கள்கூறப்படவில்லை

**35.அதி காலைச் சுரம்**
2 நூல்களில் கூறப்பட்ட போதும் குறிகுணங்கள்கூறப்படவில்லை

**36.நடுக்கற் சுரம்**
2 நூல்களில் கூறப்பட்ட போதும் குறிகுணங்கள்கூறப்படவில்லை

**37.பகற் சுரம்**
2 நூல்களில் கூறப்பட்ட போதும் குறிகுணங்கள்கூறப்படவில்லை

**38.மாலைச் சுரம்**
2 நூல்களில் கூறப்பட்ட போதும் குறிகுணங்கள் கூறப்படவில்லை

**39.தீவரற் சுரத்தின் குணம் குறிகள்**

2 நூல்களில் கூறப்பட்ட தீவரற் சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 7ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.32 ல் காட்டப்பட்டுள்ளது.

1 தோல் எலும்பு பற்றி எற்படும்
2 உடல் வெளுக்கும்
3 பிதற்றல்
4 வாய் நீருறல்

5 உடல் நோ
6 மயக்கம்
7 நாடி மெலியும்

40. **வேனற் சுரத்தின் குணம் குறிகள்**

4 நூல்களில் கூறப்பட்ட வேனற் சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 13ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.33 ல் காட்டப்பட்டுள்ளது.

1 அனல் போல் காயும்
2 நீர் வேட்கை
3வயிறு கை கால் எரிச்சல்
4 நாவறட்சி
5 பல் கடித்தல்
6 பிதற்றல்
7 படுக்கையில் புரளல்
8 பெருமூச்சு
9 உடல் நோ
10 அதிக தூக்கம்
11 மூர்ச்சை
12 அக்கினி மந்தம்
13 மயக்கம்

**41.கொட்டாவி சுரம்**

2நூல்களில் கூறப்பட்ட போதும் குறிகுணங்கள் கூறப்படவில்லை

**42.விக்கற் சுரம்**

2நூல்களில் கூறப்பட்ட போதும் குறிகுணங்கள் கூறப்படவில்லை

## 43.ஏப்பச் சுரம்

2நூல்களில் கூறப்பட்ட போதும் குறிகுணங்கள் கூறப்படவில்லை

**44.வியர்வை சுரம்**

2நூல்களில் கூறப்பட்ட போதும் குறிகுணங்கள் கூறப்படவில்லை

**45.தூங்காச் சுரம்**

2நூல்களில் கூறப்பட்ட போதும் குறிகுணங்கள் கூறப்படவில்லை

**46.இருமல் சுரம்**

2நூல்களில் கூறப்பட்ட போதும் குறிகுணங்கள் கூறப்படவில்லை

**47.கட்டி சுரம்**

2நூல்களில் கூறப்பட்ட போதும் குறிகுணங்கள் கூறப்படவில்லை

**48.சீழ்கொள்ளும் சுரம்**

2நூல்களில் கூறப்பட்ட போதும் குறிகுணங்கள் கூறப்படவில்லை

**49.பழஞ் சுரத்தின் குணம் குறிகள்**

3நூல்களில் கூறப்பட்டபழஞ் சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 3ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.34 ல் காட்டப்பட்டுள்ளது.

1 மாறி மாறி வரும்
2 ஒரு மாத காலம் வரை நீடிக்கும் 3 முக்குற்றம் கூடும்

**50.வீக்க சுரத்தின் குணம் குறிகள்**

2நூல்களிலும் குறிகுணமாக கப வாத தொந்தத்தால் ஏற்படும் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

**51.கழிச்சற் சுரத்தின் குணம் குறிகள்**

5நூல்களில் கூறப்பட்டகழிச்சற் சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 10 ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.36 ல் காட்டப்பட்டுள்ளது.

1 உணவு விருப்பம் இன்மை
2 அக்கினி மந்தம்
3 நாவறட்சி
4 கை கால் சிவத்தல்
5. கழிச்சல் குருதியுடன் வெளியேறும்
6 மனக்கலக்கம்
7 உடல் நோ
8 வாந்தி
9 பசி இன்மை
10 மார்பு வயிற்றில் சிவப்பு நிற புள்ளிகள்

### 52. வாந்தி சுரத்தின் குணம் குறிகள்

3 நூல்களில்  கூறப்பட் வாந்தி சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 15ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.37 ல் காட்டப்பட்டுள்ளது.

1 வாந்தி
2 வியர்வை
3 கழிச்சல்
4 உடல் நோ
5 வயிறு இரைத்தல்
6 காது கேளாமை
7 நா வரளல்
8 உணவு விருப்பம் இன்மை
9. புளித்த இரத்தவாந்தி
10 மார்பு வலி( எரிவு)
11 துர்பலம்
12. கை, கால் குளிர்ச்சி
13. நிறக்குறைவு
14. இந்திரிய நஷ்டம்
15.நாலுநாளுக்குள் இறப்பு

### 53. மோது சுரத்தின் குணம் குறிகள்

2 நூல்களில்  கூறப்பட்ட வாந்தி சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 6ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.38 ல் காட்டப்பட்டுள்ளது.

1 கை கால் தளரும்
2 உடல் நோ
3 வியர்வை
4 ஏப்பம்
5 பிரமை
6 குளிர் உணவில் விருப்பம்

### 54. நாவேறு சுரத்தின் குணம் குறிகள்

2 நூல்களில்  கூறப்பட்ட  நாவேறு சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 5ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.39 ல் காட்டப்பட்டுள்ளது.

1 தலை நோ
2 வாந்தி
3 தயக்கம்
4 உடல்மெலிவு
5 வாய்பிதற்றல்

**55. ஏவற் சுரத்தின் குணம் குறிகள்**

2 நூல்களில் கூறப்பட்ட ஏவற் சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 4 ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூால் ஆய்வு விபரம் அட்டவணை 3.40 ல் காட்டப்பட்டுள்ளது.

1 கொப்பளம்
2 மனச்சோர்வு
3 மனக்கலக்கம்
4 வாய் பிதற்றல்

**56. பூத சுரத்தின் குணம் குறிகள்**

7 நூல்களில் கூறப்பட்டபூதசுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 21ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.41 ல் காட்டப்பட்டுள்ளது

1 உடல் கறுப்பு
2 பிதற்றல்
3 ஆடல் பாடல்
4 மயிர் கூச்சல்
5 எப்பொருளிலும் ஆசைப்படல்
6 தலையிடி
7 மயக்கம்
8 வியர்த்தல்
9 கண்சிவத்தல்
10 விழித்துப்பார்த்தல்
11 கழிச்சல்
12 தூக்கமுண்டாகும்
13 மூட்டு நோ
14 களைப்பு
15 அதிக பசி தாகம்
16 வயிறு கழிதல்
17 விழி வெளுப்பு சோம்பல்
18 காரணமின்றி சிரித்தல்
19.சுரம்
20 பெருமூச்சு

**57.மருந்து வேகச் சுரத்தின் குணம் குறிகள்**

2 நூல்களில் கூறப்பட்டமருந்து வேகச் சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 9ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.42 ல் காட்டப்பட்டுள்ளது.

1 மருந்து நஞ்சினால் ஏற்படும்
2 குருதி கேடடையும்
3 வாய் புண்
4 உடல் வீக்கம்
5 இருமல்
6 தும்மல்
8 வாந்தி
9 உடல் வெளுத்தல்

7 கழிச்சல்

**58.நஞ்சு சுரத்தின் குணம் குறிகள்**

7 நூல்களில் கூறப்பட்டநஞ்சுசுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 12 ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.43 ல் காட்டப்பட்டுள்ளது

1 பூச்சி கடித்த இடத்தில் வீக்கம் நமைச்சல˙எரிச்சல்
2 உடல் முழுவதும் முகத்தில் நீர்கோர்த்தல்
3 விக்கல்
4 ஏப்பம்
5 செரியாமை
6 வாந்தி
7 மயக்கம்
8 மூர்ச்சை
9 பசி தாகம் குளிர்
10 பிதற்றல்
11 பெருமுச்சு
12 நடுக்கம் தலைவலி கழிச்சல்

**59 சினச்சுரத்தின் குணம் குறிகள்**

2 நூல்களில் கூறப்பட்ட சினச் சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 3ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.44 ல் காட்டப்பட்டுள்ளது

1 தலையிடி
2 கண்டபடி பேசுதல்
3 மயக்கம்

**60.பயச் சுரத்தின் குணம் குறிகள்**

3 நூல்களில் கூறப்பட்ட பயச் சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 11ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.45 ல் காட்டப்பட்டுள்ளது

1 உடல் நடுக்கம்
2 வியர்த்தல்
3 வயிறு எரிதல்
4 கண் சிவத்தல்
5 தலை சுற்றல்
6 மயக்கம்
7 மயிர் சிலிர்த்தல்
8 பெருமுச்சு

9 மார்பு துடித்தல்
10 பல் கடித்தல்
11 செத்தவன் போல் காணல்

### 61.வருத்தச் சுரத்தின் குணம் குறிகள்

2 நூல்களில் கூறப்பட்ட வருத்தச் சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 2ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.46 ல் காட்டப்பட்டுள்ளது

1 வாய் பிதற்றல்
2 ஆடல் பாடல் அழுதல்

### 62. காம சுரத்தின் குணம் குறிகள்

3 நூல்களில் கூறப்பட்ட காமசுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 6ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.47 ல் காட்டப்பட்டுள்ளது

1 பண்புகளை இழத்தல்
2 உடல் கண் எரிச்சல்
3 அறிவு மயக்கம்
4 நா வரறல்
5 நீர் வேட்கை
6 மார்பு துடித்தல்

### 63 தெய்வசினச் சுரத்தின் குணம் குறிகள்

2 நூல்களில் கூறப்பட்ட தெய்வசினச்சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 5ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.48 ல் காட்டப்பட்டுள்ளது

1 தலை நோதல்
2 மயக்கம்
3 வாந்தி
4 தலை சுற்றல்
5 பிரம்மை

**64சேர்க்கை சுரம்**

2நூல்களில் கூறப்பட்ட போதும் குறிகுணங்கள் கூறப்படவில்லை

**65.கணக்காய்ச்சல் சுரம்**

ஒரு நூலில் கூறப்பட்ட போதும் குறிகுணங்கள் கூறப்படவில்லை

**66.உடம்பு நோய் சுரம்**

ஒரு நூலில் கூறப்பட்ட போதும் குறிகுணங்கள் கூறப்படவில்லை

**67 ஆம சுரத்தின் குணம் குறிகள்**

4 நூல்களில் கூறப்பட்ட ஆம சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 15 ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.49 ல் காட்டப்பட்டுள்ளது

1 உடம்பு எரிச்சல்
2 தூக்கம் வரும்
3 உடல் இளைப்பு
4 பசி இன்மை
5 உடல் வெப்பம்
6 கோபம்
7 இருமல்
8 உடல் களைப்பு
9 மயக்கம்
10 உடல் வலி
11 சீத பேதி தாகம்
12 உடல் ஊதி வெளிறல்
13 உடல் கறுப்பு
14. வாய் கைத்தல்
15.சலக்கடுப்பு

**68.இரத்த சுரத்தின் குணம் குறிகள்**

4 நூல்களில் கூறப்பட்ட தெய்வசினச் சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 16ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.50 ல் காட்டப்பட்டுள்ளது

1 வியர்வை
2 தாகம்
3 முர்ச்சை
4 நாக்கு மஞ்சளாதல்
5 நெஞ்சில் கோளை
6 மலபந்தம்
7 நித்திரை
8 உடல் நடுக்கம்
9 சிறுநீர் கண்கள் மஞ்சளாதல்
10 வயிற்றுவலி
11 கழிச்சல்
12 தலைசுற்று
13 கண் தள்ளும்
14 கை கால் குளிர்ச்சி
15.உடல் வலி
16 மலம் சிவக்கும்

**69அன்னபனாதி சுரம்**

2 நூல்களில் கூறப்பட்ட போதும் குறிகுணங்கள் கூறப்படவில்லை

**70.மாங்கிச சுரம்**

ஒரு நூலில் கூறப்பட்ட போதும் குறிகுணங்கள்கூறப்படவில்லை

**71.அட்சர மாந்த சுரம்**

ஒரு நூலில்கூறப்பட்ட போதும் குறிகுணங்கள்கூறப்படவில்லை

**72.சீதவிச சுரம்**

ஒரு நூலில் கூறப்பட்ட போதும் குறிகுணங்கள்கூறப்படவில்லை

**73.நளிர் சுரம்**

ஒரு நூலில் கூறப்பட்ட போதும் குறிகுணங்கள்கூறப்படவில்லை

**74.தாப சுரம்**

ஒரு நூலில் கூறப்பட்ட போதும் குறிகுணங்கள்கூறப்படவில்லை

**75.அஜீரண சுரத்தின் குணம் குறிகள்**

7 நூல்களில் கூறப்பட்ட அஜீரண சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 23ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.51 ல் காட்டப்பட்டுள்ளது

| | | | |
|---|---|---|---|
| 1 | தூக்கமுண்டாகும் | 9 | வயிற்றுப் பொருமல் |
| 2 | தேகம் இளைக்கும் | 10 | உடம்பு குளிர்ச்சி |
| 3 | விக்கல் | 11 | கழி |
| 4 | பசியின்மை | 12 | கொட்டாவி |
| 5 | உடல் வலி | 13 | உடல் கறுத்தல் |
| 6 | புளித்த ஏப்பம் | 14 | எப்பொருளிலும் ஆசைப்படல் |
| 7 | வாந்தி | 15 | பிதற்றல் |
| 8 | தாகம் | 16 | மயிர் கூச்சரித்தல் |
| 17 | தலையிடி | 20 | கண் சிவத்தல் |
| 18 | மயக்கம் | 21 | அக்னி மந்தம் |
| 19 | வியர்த்தல் | 22 | இருமல் |
| | | 23 | மேல் மூச்சு |

**76.அத்தி சுரத்தின் குணம் குறிகள்**

4 நூல்களில் கூறப்பட்ட் அத்தி சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 12ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.52 ல் காட்டப்பட்டுள்ளது

1 தேக பலம் குறையும்
2 கை கால் வலி

3 நித்திரை இன்மை
4 நாவரட்சி
5 உடல் நடுக்கம்
6 புத்தி பேதலிப்பு
7 உதடு சிவக்கும்
8 அக்கினி மந்தம்
9 உடல் வெளுக்கும்
10 இழைப்பு
11 கழிச்சல்
12 தாகம்

**77.பிரேத சுரத்தின் குணம் குறிகள்**

பரராசசேகரம், செகராசசேகர நூல்களில் கூறப்பட்டபிரேத சுரத்தின் குறிகுணங்களாக மலம் கழியும், உடல்நடுக்கம். உளைவு குத்து கை கால் அசைவற்று கிடக்கும் அறிவு கெடும் கூறப்பட்டுள்ளது

**78.சோக சுரத்தின் குணம் குறிகள்**

5நூல்களில் கூறப்பட்டசோக சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 6ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.53 ல் காட்டப்பட்டுள்ளது

1 நாவறட்சி
2 மல சல கட்டு
3 சலம் சிவப்பு
4 புறங்கால் வீங்கும்
5 மயக்கம்
6. சுரம்

**79.அபிகாத சுரம்**

2 நூல்களில் கூறப்பட்ட அபிகாத சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 9ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.54 ல் காட்டப்பட்டுள்ளது.

1.தாகம்
2. இளைப்பு
3. கை, கால் தளர்தல்
4.சுரம்
5. உடல்நோ
6.வியர்வை
7. பிரம்மை
8. குளிர் உணவில் விருப்பம்
9. தேக நிறம் கெடுதல்

**80.ஆகிக வாத சுரம்**

செகராசசேகர வைத்திய திறவுகோல் எனும் நூலில் மட்டும் **ஆகிக வாத சுரத்தின்**குணங்குறிகள் தலை வலி,தாகம் மயக்கம் மலம் மூத்திரம் கட்டும் தேகம் இளைக்கும் என்பவை கூறப்பட்டுள்ளன

**81.சுரபாத சுரம்**

செகராசசேகர வைத்திய திறவுகோல் எனும் நூலில் மட்டும் **சுரபாதசுரத்தின்** குணங்குறிகள் கை கால் எரிச்சல் மலம் மூத்திரம் மஞ்சளாகும் காது இரைச்சல் என்பவை கூறப்பட்டுள்ளன

**82.சாதுர்திக சுரம்**

செகராசசேகர வைத்திய திறவுகோல் எனும் நூலில்**சாதுர்திக சுரம்**கூறப்பட்டுள்ள போதும்குணங்குறிகள் கூறப்படவில்லை.

**83.வாத அத்தீ சுரம்**

செகராசசேகர வைத்திய திறவுகோல், பரராசசேகரம் எனும் நூல்களில்**வாத அத்தீசுரத்தின்** குணங்குறிகளாக தலை வலி,தாகம் மயக்கம் கை கால் ஓச்சல்என்பவை கூறப்பட்டுள்ளன.

**84.சங்கிரக அஸ்தி சுரம்**

செகராசசேகர வைத்திய திறவுகோல் எனும் நூலில் **சங்கிரக அஸ்தி சுரம்** கூறப்பட்டுள்ள போதும ் குணங்குறிகள் கூறப்படவில்லை.

**85.முழுத்த சுரத்தின் குணம் குறிகள்**

தன்வந்திரி வைத்தியம் எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட முழுத்த சுரத்தின் குறிகுணங்களாக தலை சுற்று, தலை நோ, வாய் கைப்பு, கண் சிவப்பு, பீழை சாரும், மூக்கு நீர் வடியும் உடல் உலற்றும், வியர்வை முதுகு அடிவயிறு வேர்க்கும், மயக்கம்,நா புண்ணாகும் பிதற்றல் என்பன இதன் குறிகுணங்களாக கூறப்பட்டுள்ளன

**88.சய சுரம்**

செகராஜசேகர வைத்திய திறவுகோல் எனும் நூலில் மட்டும் சய சுரத்தின் குறிகுணங்கள் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

விடாமல் காயும், இருமலுடன் தொண்டை புகைச்சலும் ஏற்படும், கைகள், முகம், கண்கள் இவை வெண்மையாகும் அல்லது கருநிறமடையும், நாக்கு மரத்துப்போய் வாய் துர்நாற்றமடிக்கும்.

**90. பித்த பிரதாப சுரம்**

செகராசசேகர வைத்திய திறவுகோல் எனும் நூலில்பித்த பிரதாப **சுரம்** கூறப்பட்டுள்ள போதும் குணங்குறிகள் கூறப்படவில்லை.

**91. அபின்யாஸ ஸந்திபாத ஜ்வரம்**

தோஷாதிகள் பிரகோபமடைந்து, மார்பிலுள்ள ஸ்ரோதஸ்ஸுகளை அடைந்து அங்கு ஆமதோஷத்தை விருத்தி செய்து தோஷங்கள் கெட்டியாகின்றன. மேலும் இவ்வாமதோஷம் புத்திஸ்தானத்திலும், இதர இந்திரிய மார்க்கங்களிலும் பிரவேசித்து ஜ்வரத்தை உண்டாக்கும். இது காது, கண் முதலான உறுப்புக்களைப் பாதிக்கின்றன. நோயாளிக்கு எந்த வேலைகளைச் செய்வதிலும் பிரியம் இருக்காது. ஸ்பர்ச உணர்ச்சி, வாசனைகளையறியும் சக்தி முதலானவைகள் மந்தப்பட்டுவிடும். தலையை இங்கமங்கும் புரட்டுவான், சாப்பாட்டில் விருப்பமிராது. கூச்சலிடுவான், படுக்கையிலும் நிலைகொள்ள முடியாது தவிப்பான், வார்த்தைகளும் ஹீனமாகும். இது அஸாத்யமாகும்.

**92.சுக்கில தாது கத சுரத்தின் குணம் குறிகள்**

2 நூல்களில் இச்சுரம் கூறப்பட்டுள்ளது. அகத்தியர் 2000 எனும் நூலில் அதிகமான தூக்கத்துடன் அறிவு கெடும். இளைப்பு இருக்காது என கூறப்பட்டுள்ளது.

அனுபோக வைத்திய பிரம்மரகசியம் எனும் நூலில் கண்களிருள் கம்மல், மர்மஸ்தானங்களில் நோதல், அதிக நித்திரை, பிரலாபம், ஞாபக மறதி, ஈனத்தொனி, சர்வாங்க வெளிவரலுடன் வீக்கம், அசீரணம், பேதி, வாந்தி, கைகால் குளிர்ச்சி ஏற்படும் என கூறப்பட்டுள்ளது.

**93.சாப சுரத்தின் குணம் குறிகள்**

அனுபோக வைத்தியபிரம்ம ரகசியம் எனும் நூலில்மட்டும் சாபசுரம் கூறப்பட்டுள்ள பேதும் குறிகுணங்கள் எவையும் கூறப்படவில்லை.

**94.அபிசார சுரத்தின் குணம் குறிகள்**

அனுபோக வைத்தியபிரம்ம ரகசியம் எனும் நூலில் மட்டும் அபிசார சுரம் கூறப்பட்டுள்ளது. குறிகுணங்களாக தாகம் கொப்பளம் மனது பிதற்றல் என்பன கூறப்பட்டுள்ளது.

**95.அவுசதகந்த சுரத்தின் குணம் குறிகள்**

அனுபோக வைத்தியபிரம்ம ரகசியம் எனும் நூலில்மட்டும ் அவுசதகந்த சுரம்கூறப்பட்டுள்ள போதும் குறிகுணங்கள் எவையும் கூறப்படவில்லை.

**96.கோப சுரத்தின் குணம் குறிகள்**

அனுபோக வைத்தியபிரம்ம ரகசியம் எனும் நூலில்மட்டும்கோப சுரம் கூறப்பட்டுள்ள பேதும் குறிகுணங்கள் எவையும் கூறப்படவில்லை.

**97.அவிசங்க சுரத்தின் குணம் குறிகள்**

அனுபோக வைத்தியபிரம்ம ரகசியம் எனும் நூலில்மட்டும் அவிசங்க சுரம்கூறப்பட்டுள்ள போதும் குறிகுணங்கள் எவையும் கூறப்படவில்லை.

98. **சீத சுரம்** -

அனுபோக வைத்தியபிரம்ம ரகசியம் எனும் நூலில் மட்டும் தேகத்தில் குளிர்ச்சி, நடுக்கம், தினவு, சோம்பல், பிரலாபம், மூர்ச்சை, பிரம்மை, சிலேத்தும், வாதம் இரண்டும் முதலில் இரச தாதுவை அனுசரித்து நடுக்கலையும் குளிரையும் உண்டாக்கி பின் சுரத்தை உண்டாக்கும்.

**99.சங்கம தோச சுரத்தின் குணம் குறிகள்**

அனுபோக வைத்தியபிரம்ம ரகசியம் எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட சங்கம தோச சுரத்தின் குறிகுணங்களாக் கண்ணீர், கம்மல், கண் சிவக்கும், தலை நோ, துடையில் நோ, வயிறு எரிச்சல், கீல்களில் நோ, தாகம், உள்ளங் கை கால் குளிர்ச்சி என்பன கூறப்பட்டுள்ளன.

**100.கிருமி சுரத்தின் குணம் குறிகள்**

அனுபோக வைத்தியபிரம்ம ரகசியம் எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட கிருமி சுரத்தின் குறிகுணங்களாக் வயிற்று வலி, மார்பு வலி,அதிசாரம் என்பன கூறப்பட்டுள்ளன.

### 101.சுராதி சார சுரத்தின் குணம் குறிகள்

அனுபோக வைத்தியபிரம்ம ரகசியம் எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட சுராதி சார சுரத்தின் குறிகுணங்களாக அதிதாபம், மார்பு நோய், பேதி என்பன கூறப்பட்டுள்ளன.

### 102.இரத்தாதி சார சுரத்தின் குணம் குறிகள்

அனுபோக வைத்தியபிரம்ம ரகசியம் எனும் நூலில் மட்டும் கூறப்பட்டஇரத்தாதி சுரத்தின் குறிகுணங்களாக் அதிதாபம், மார்பு நோய், பேதி, இரத்த கழிச்சல், தாகம்,உடல் நோ என்பன கூறப்பட்டுள்ளன.

### 103.அம்மை சுரத்தின் குணம் குறிகள்

அகத்தியர் குணவாகடம் என்னும் நூலில் சின்னம்மை என்னும் பெயரின் கீழ் ரணம், இருமல்,விக்கல், காயம் இவை வரும்போது சுரம் உண்டாகும்.

அனுபோக வைத்தியபிரம்ம ரகசியம் எனும் நூலில் கூறப்பட்ட அம்மை சுரத்தின் கீழ்(மசூசிகா என்னும் அம்மை சுரம்) வாத பித்த சிலேத்துமத்தால் மனிதர்களுக்கு உண்டாகின்றது. இதற்கு சிகிச்சை செய்வது அசாத்தியம். இந்த சுரம் உண்டான மூன்று நாள் வரையிலும் மிகவும் மும்மரமாய் இருக்கும். திரிதோச முறைக்காய்ச்சல்களுக்கு நாடி நடப்பது போல் இதற்க்கும் நடக்கும். மேலும் இது மிகவும் உக்கிரமாய் 8 – 10 நாட்கள் வரையிலும் தேகத்திற்கு உள்ளிருந்து பின் கொப்பளங்கள் உண்டாகி சீழ் கசைந்து பக்கு கட்டும். இது சக்தி சொருபமுடையது. மேலும் இது வாத பித்த சிலேத்துமங்களை இரசாதி சப்த தாதுக்களுடன் அனுசரிக்கின்றமையால் 8 அல்லது 9 ஆவது நாளில் சுரம் குறைந்து இது முதலில் அதிகுருரமாய் இருக்கிறதினால் அதன் நுட்பத்தை அறிய வைத்தியர்களிற்கு அசாத்தியமாய் இருக்கிறது. கொப்பளங்கள் வட்டமாய் கண்களிற்கு இன்பமாய்த் தோன்றினால் பித்தத்தால் தோன்றியது என்றும் கருங்குரங்கு மயிர்களைப்போல் எங்கும் தடித்து விசத்தைப்போல் இருந்தால் சிலேத்துமத்தால் உண்டானது என்றும் தோசத்துடன் கலந்து நாக்கைப் போலிருந்தால் வாதத்தினால் உண்டானது என்றும் திரிதோசத்தால் உண்டானால் அவன் எமனைப்போல் பார்ப்பான் என்றும் அறியவேண்டியுள்ளது.அசாத்திய லட்சணங்களாக கொப்பளங்கள் பவளக்குண்டுகளைப்போலும் வட்டமாயும் நீண்டும் கறுப்பாயும் சிவப்பாயும் நானாவித வர்ணமாயும் தோன்றி சீக்கிரத்தில் மறைந்தும் தாகம்,பேதி, தேகநடுக்கம், சுவாசகாசங்கள், பிதற்றல்,விக்கல், மூர்ச்சை, தாபம், கை கால் வீக்கம், என்னும் லட்சணங்கள் இருந்தால் அசாத்திய ரோகம் என்று கூறப்பட்டுள்ளது.

104.**சன்னிபாதசுரத்தின் குணம் குறிகள்**

6 நூல்களில் கூறப்பட்டசன்னிபாதசுரத்தின் குறிகுணங்களும் தொகுத்து 28ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.55ல் காட்டப்பட்

உடல் சோர்வு
புத்தி தடுமாற்றம
உடல்எரிவு
கண் சிவப்பு, கண்ணீர் வரும்
வாய் பிதற்றல்
மூர்ச்சை
உடல் வலி, மூட்டுவலி
இருமல்
வீக்கம்
மிகுந்த சுரம்
வாந்தி
தாகம்
குளிர் நடுக்கம்
மார்பு துடித்தல்
மார்பு வலி
கோழை கட்டல்

காது கேளாமை, இரைச்சல்
மேல் மூச்சு
எலும்புருக்கி
பசியின்மை
தலை கை கால் வலி
நாடி வேகம் கூடுதல்
பேதி, மலக்கட்டு
நா கறுக்கும் மொற மொறப்பு
வெகு மூத்திரம
வயிற்று வலி இரத்தக் கழிச்சல்
உடல் முழுவதும் மஞ்சள்
புகல் தூக்கம், தூக்கமின்மை
நாக்கை அசைக்க முடியாமை
ஊடம்பில் சிவப்பு, கறுப்பு , தடிப்பு
குரற்கம்மல்

**105.சப்த சுரத்தின் குணம் குறிகள்**

அகத்தியர் குணவாகடம் எனும் நூலில் மட்டும் கூறப்பட்டசப்த சுரத்தின் குறிகுணங்களாக் இரத்தம் கெடும், உடல் பலம் குறையும், விடாது சுரம் காயும் என்பன கூறப்பட்டுள்ளன.

**106.அதிசார சன்னிபாத சுரத்தின் குணம் குறிகள்**

அகத்தியர் குணவாகடம் எனும் நூலில் மட்டும் அதிசார சன்னிபாத சுரத்தின் குறிகுணங்களாக நடுக்கம், தலைவலி, தாகம், பசியின்மை, களைப்பு, நாவுலரும், வயிற்று பொருமல்,குமட்டல், வாந்தி, இரத்த கழிச்சல், முர்ச்சை, மயக்கம் என்பன கூறப்பட்டுள்ளன.

**107.அல்ப சுரத்தின் குணம் குறிகள்**

அகத்தியர் குணவாகடம் எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட அல்ப சுரத்தின் குறிகுணங்களாக் உணவில் விருப்பம் இன்மை, தலை வலி, முதுகு கை கால் வலி, நித்திரை குறைவு, நா உலரல், மலம் கட்டும், மூத்திரம் சிவப்பாக மாறும், முகம் வெளுக்கும், வியர்வை, இருமல்,வயிற்று பொருமல் என்பன கூறப்பட்டுள்ளன.

108.**புனரா வர்த்தி சுரத்தின் குணம் குறிகள்**

அகத்தியர் குணவாகடம் எனும் நூலில் மட்டும் கூறப்பட்டபுனரா வர்த்தி சுரத்தின் குறிகுணங்களாக் தலை வலி, வாந்தி, தாகம்,நா வெளுத்தல்,சரீர வேதனை, மலபந்தம், மூத்திரம் சிவப்பாக மாறும், வீக்கம், கட்டி,கண்நோய் மூர்ச்சை என்பன கூறப்பட்டுள்ளன.

**109.விஸ்போடகசுரம்**

அகத்தியர் குணவாகடம் எனும் நூலில் மட்டும் விஸ்போடகசுரம் கூறப்பட்ட போதும் சுரத்தின் குறிகுணங்கள் எவையும் கூறப்படவில்லை.

110. **விசச் சிலேத்துமச் சுரம்**

அகத்தியர் 2000 எனும் நூலில் மட்டும் கைகள், கால்கள் முதலான இடங்களில் குளிர்ச்வி, ஆனால் வயிற்றில் சூடு, உடம்பில் வியர்வை உண்டாகும். காங்கையும் அதிகரிக்கும். கபம் தொண்டையை அடைக்கும். பிடரியில் பார உணர்ச்சி ஏற்படும். இவை விஷ சிலேத்மச் சுரக்குறியாக கூறப்பட்டுள்ளது.

### 111. பித்த தாது, மேதைதாது கத சுரம்

அகத்தியர் 2000 எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட பித்த தாது, மேதைதாது கத சுத்தின் குறி குணங்களாக வாய் பிதற்றலுடன், உடம்பு குளிர்ந்து மெலிவடையும் என கூறப்பட்டுள்ளது.

### 112. மஜ்ஜை கத சுரம்

அகத்தியர் 2000 எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட மஜ்ஜை கத சுரத்தின் குறிகுணங்களாக இருமல், பெருமூச்சு, விக்கல், அடிக்கடி மயக்கம், உடம்பு ஓய்ச்சல், பிராணவாயு, அபானவாயு இவைகளை அதிகரிக்கச் செய்து சுரம் காயும் என கூறப்பட்டுள்ளது.

### 113. ஆகந்துக சுரம்

3 நூல்களில் இச்சுரம் கூறப்பட்டுள்ளது.இவற்றின் குறிகுணங்கள் தொகுத்து 18 கூறப்பட்டுள்ளது.

1. உடல் எரிச்சல்,
2. வியர்வை,
3. நாவறட்சி,
4. குளிர்
5. உடம்பில் குத்.துவலி,
6. ஆகாரத்தில் இச்சை,
7. கொப்பளங்கள்,
8. மனதுதபித்தல்,
10. தாகம்
11. வயிற்றுளைவு,
12. வாய் கறுத்தல்,
13. மாரடைப்பு
14. மூர்ச்சை,
15. தலைவலி,
16. நடுக்கம்,
17. பிதற்றல்,
18. நித்திரையின்மை

ஆகிய குறிகள் தோன்றும் என கூறப்பட்டுள்ளது.அட்டவணை 3.56 ல் காட்டப்பட்டுள்ளது.

### 114. மாமக சுரம்

அகத்தியர் 2000 எனும் நூலில் மட்டும் இச்சுரத்தின் குறிகுணங்களாக உடம்பில் குளிர் உண்டாகி, எரிச்சல், நாவறட்சி, கால் வயிறு முதலிய இடங்களில் வீக்கம், கைகாலெரிச்சல், நகம், கண்கள், தோல் முதலான இடங்களில் இரத்தம் குறைந்து வெளுத்துப்போதல், வாந்தி, கண், தலை, வயிறு முதலிய இடங்களில் வலி ஏற்படும் என கூறப்பட்டுள்ளது.

**115. குலைப்பு சுரம்**

அகத்தியர் 2000 எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட இச்சுரத்தின் குறிகள் பின்வருமாறு சுவாசம் அதிகரித்து இருமல், நாவறட்சி, மயக்கம் ஏற்படும் என கூறப்பட்டுள்ளது.

**116.ஆகிகமாறல் சுரத்தின் குணம் குறிகள்**

யூகி வைத்திய சிந்தாமணி எனும் நூலில் மட்டும் கூறப்பட்டஆகிக மாறல் சுரத்தின் குறிகுணங்களாக் மாறி மாறி சுரம் 15 நாட்களுக்கு ஒரு தடவையாகவும் அல்லது மாதத்தற்கு ஒருதடவை சுரம் காயும்.

**117.ஆகீக சுரத்தின் குணம் குறிகள்**

யூகிமுனி வைத்திய சிந்தாமணி நூலில் கூறப்பட்ட **ஆகீக**சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்துக் 13 கூறப்பட்டுள்ளது.

1 குளிர்
2 தேகவாட்டம்
3 இருமல்
4 உடம்பில் எரிச்சல்
5 தலைவலி
6 கண்வலி
7 தூக்கம்
8 மயக்கம்
9 உடல் வெளுக்கும்
10 கண் பசுமை நிறம்
11 வாந்தி
12 இரத்தம் குறைவு
13 பிதற்றல்

**118.சா்மதாது கத சுரத்தின் குணம் குறிகள்**

யூகி வைத்திய சிந்தாமணி எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட சா்மதாது கதசுரத்தின் குறிகுணங்களாக் நாடி மந்தம், தலை வலி, தாகம்,உடல் வெண்மை, பிதற்றல், உடல் எரிச்சல்,மயக்கம் என்பன கூறப்பட்டுள்ளன.

### 119.வாத அத்தி சுரத்தின் குணம் குறிகள்

2நூல்களில் கூறப்பட்டவாத அத்திசுரத்தின் குறிகுணங்களும் தொகுத்துக் 8 ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.57 ல் காட்டப்பட்டுள்ளது.

1 எலும்பில் வாதம் கூடி அடிக்கடி சுரம் காயும்
2 எலும்பில் சிலுசிலுப்பு அடிக்கடி சுரம் காயாது
3 செரியாமை
4 பலசுவை பொருட்களில் விருப்பம்
5 அறிவு மயக்கம்
6 கைகால் ஓய்ச்சல்
7 தேகம் மெலியும்
8 தாகம்

### 120.வாத மாசீத சுரத்தின் குணம் குறிகள்

2நூல்களில் கூறப்பட்டவாத மாசீதசுரத்தின் குறிகுணங்களும் தொகுத்துக் 10 ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.58 ல் காட்டப்பட்டுள்ளது.

1 அதிக தாகம்
2 மலசலம் அடைக்கும்
3 தேகம் விறைக்கும்
4 இளைப்பு
5 தலையிடி
6 எழுந்துநடக்க முடியாமை
7 நடுக்கம்
8 விக்கல்
9 பிகற்றல
10 வியர்வை

### 121.வாத கன சுரத்தின் குணம் குறிகள்

2நூல்களில் கூறப்பட்டவாத கன சுரத்தின்குறிகுணங்களும் தொகுத்துக் 6 ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.59 ல் காட்டப்பட்டுள்ளது

1 மலசலம் அடைக்கும்
2 நா வறட்சி
3 தேக எரிச்சல்
4 கழிச்சல்
5 தாகம்
6 நா தொண்டை புண்ணாகும்

**122.நானாளை மாறற் சுரத்தின் குணம் குறிகள்**

**2**நூல்களில் கூறப்பட்ட வாத நானாளை மாறற் சுரத்தின் குறிகுணங்களும் தொகுத்துக் 7 ஆக கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.60 ல் காட்டப்பட்டுள்ளது.

1 குளிர் சுரம்
2 உடல் வலி
3 மூட்டு வலி
4 இருமல்
5 வாந்தி
6 மயக்கம்
7 மூக்கு நீர் வடியும்

123. **வாத மாந்த கணச்சுரத்தின் குணம் குறிகள்**

˙பரராசசேகரம் சுரரோக நிதானம் எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட வாத மாந்த கணச் சுரத்தின் குறிகுணங்களாக வயிற்று பொருமல், துர்நாற்ற மலம், தேகம் மெலியும், வாந்தி, தாகம், தாபம், மயக்கம்,மரணம் என்பன கூறப்பட்டுள்ளன.

124.**வாத அதிசார சுரத்தின் குணம் குறிகள்**

˙பரராசசேகரம் சுரரோக நிதானம்எனும் நூலில் மட்டும் கூறப்பட்டவாத அதிசாரசுரத்தின் குறிகுணங்களாகவயிற்று பொருமல், புளி ஏப்பம், கை கால் குளிர்ச்சி, உடல் வெளுப்பு,அதிக தாகம் என்பன கூறப்பட்டுள்ளன

125**வாத அஜீரணசுரத்தின் குணம் குறிகள்**

பரராசசேகரம் சுரரோக நிதானம்எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட வாத அதிசாரசுரத்தின் குறிகுணங்களாகவயிற்று பசி குறையும், வயிறு மந்தம், உதரம் கால் வீங்கும், சுரம்,மிகும், அடிக்கடி வயிறு ஊதல்,தசை வறளும் என்பன கூறப்பட்டுள்ளன.

126 **வாத உதிரிசுரத்தின் குணம் குறிகள்**

**2**நூல்களில் கூறப்பட்டகுறிகுணங்களும் வாத உதிரி சுரத்தின் 5தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.61 ல் காட்டப்பட்டுள்ளது

1. உடல் வீக்கம்
2. தொண்டையில் வாய்வு மிகும்

3. கை கால் பொருத்துகளில் நோ
4. அறிவு மயக்கம்
5. வாயால் இரத்தம் கக்கும்

### 127.மாங்கிச வைசூரிசுரத்தின் குணம் குறிகள்

**2**நூல்களில் கூறப்பட்ட குறிகுணங்களும் மாங்கிச வைசூரிசுரத்தின் 8 ஆகதொகுத்துக் கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.62 ல் காட்டப்பட்டுள்ளது.

1. இருமல்
2. மயக்கம்
3. வாந்தி
4. உடலில் கொப்பளம்
5. விக்கல்
6. வியர்வை
7. உடல் உளைச்சல்
8. உடல் வலி

### 128.பித்தவிடசுரத்தின் குணம் குறிகள்

பரராசசேகரம் சுரரோக நிதானம்எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட பித்த விஷ சுரத்தின் குறிகுணங்களாக் ஒருபுறம் அதிக வெப்பமாய் சுரம் காயும், மறுபுறம் மிகக் குளிருடன் வியர்வையுண்டாகும். தலையிடிக்கும். வாயுமிகுந்து பொருமலுடன் இரைச்சல் காணும். நாவறட்சி, நித்திரையின்மை என்பன கூறப்பட்டுள்ளன.

### 129.பித்த அத்தி சுரத்தின் குணம் குறிகள்

பரராசசேகரம் சுரரோக நிதானம்எனும் நூலில் மட்டும் கூறப்பட்டபித்தஅத்தி சுரத்தின் குறிகுணங்களாக கை கால் குத்தி நோ, நித்திரை இன்மை, உடல் வறளும,நா வறளும், கை கால் கண் எரிவு, அறிவு மயங்கும் என்பன கூறப்பட்டுள்ளன.

### 130 பித்த அதிசார சுரத்தின் குணம் குறிகள்

பரராசசேகரம் சுரரோக நிதானம்எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட பித்த அதிசார சுரத்தின் குறிகுணங்களாக நோயாளியின் வயிற்றில் மந்தமுண்டாகி உணவில் வெறுப்புற்று பின்னர் இச்சுரம் தோன்றும். கழிச்சல் மிகும். தாகம் அதிகரிக்கும். நா வறளும். கையும் காலும் வெச்சென குளிர்ந்திருக்கும் என்பன கூறப்பட்டுள்ளன.

### 131 பித்த மாறற் சுரத்தின் குணம் குறிகள்

**2**நூல்களில் கூறப்பட்ட குறிகுணங்களும் 7 ஆகதொகுத்துக் கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.63 ல் காட்டப்பட்டுள்து

1 மந்தம்
2 படிப்படியாக சுரம் கூடும்
3 இருமல்
4 வாய்வு,
5 வாந்தி,
6 விக்கல்
7 மயக்கம்

**132 பித்த அசீரண சுரத்தின் குணம் குறிகள்**

பரராசசேகரம் சுரரோக நிதானம்எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட பித்த அசீரண சுரத்தின் குறிகுணங்களாக சந்நிபாத சுரங்களில் தவணை கழிந்தபின் விசேட உபதிரவம் குறைந்து சிறு வலியுடன் சுரங்காயும், தண்ணீர் தாகமும் தேக வெப்பும் ஏற்படும் என்பன கூறப்பட்டுள்ளன.

**133.பித்த சன்னிசுரத்தின் குணம் குறிகள்**

**2** நூல்களில் கூறப்பட்டகுறிகுணங்களும் 10 ஆக் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.64 ல் காட்டப்பட்டுள்ளது.

134 **பித்த சீத சுரத்தின் குணம் குறிகள்**

**2** நூல்களில் கூறப்பட்டகுறிகுணங்களும் 9 ஆகதொகுத்துக் கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.65 ல் காட்டப்பட்டுள்ளது

| | | | |
|---|---|---|---|
| 1 | மயக்கம் | | |
| 2 | குளிர் சுரம் | | |
| 3 | பயம் | 7 | எரிச்சல் |
| 4 | தாகம் | 8 | மூர்ச்சை |
| 5 | உறக்கம் | 9 | தலைகிறுகிறுப்பு |
| 6 | சித்தபிரம்மை | | |

**35 பித்த இரத்த சுரத்தின் குணம் குறிகள்**

**2** நூல்களில் கூறப்பட்டகுறிகுணங்களும் 9 ஆகதொகுத்துக் கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.66 ல் காட்டப்பட்டுள்து

| | | | |
|---|---|---|---|
| 1 வாந்தி | | 7 | மார்பில் கோழை கட்டும் |
| 2 உள்மூச்சு, | | 8 | உடல் வலி |
| 3 இளைப்புண்டாகும் | | 9 | மலம் சிவப்பாகும் |
| 4 கண் முகம் வெளுக்கும் | | | |
| 5 உடல் மஞ்சள் நிறம் | | | |
| 6 சிறுநீரில் இரத்தம் வெளிப்படும் | | | |

### 136 பித்த இரத்த பிரதாப சுரத்தின் குணம் குறிகள்

பரராசசேகரம் சுரரோக நிதானம்எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட பித்த இரத்த பிரதாப சுரத்தின் குறிகுணங்களாக அக்னி போல் சுரம். நா வெடித்து புண்ணுண்டாகி நாற்றமிகும், வயிறும் காலும் சினந்து வலிக்கும். வயிறு பொருமும், அரைக்குக் கீழ் உறுப்புகள் குளிரும், கண்கள் குழிவிழுந்து கரிக்கும். நாக்கு கசக்கும். மர்மதானங்களில் அதிக அழற்சி உண்டாகும். கை கால் உளைந்து முறிந்து போவதுபோல் வேதனை தரும். மலம் அதிக சிவப்பாக கழியும். உடம்பிற் சொறிவு. மேலிளைப்பு, விக்கல், திடுக்கிடல் ஏற்படும். என்பன கூறப்பட்டுள்ளன.

### 137.பித்த விரணசுரத்தின் குணம் குறிகள்

**2** நூல்களில் கூறப்பட்டகுறிகுணங்களும் 7 ஆகதொகுத்துக் கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.67 ல் காட்டப்பட்டுள்ளது

1 நெஞ்சிடிக்கும்.
2 விலாப்புறங்களில் பிடிப்பு.
3 அவயவங்களில் புண்கள்
4 கை கால் குத்தியுளையும்.
5 பயம்
6 சுரம் விடாமல் காயும்.
7 மயக்கம்

### 138. ஆமசிலேற்பன சுரத்தின் குணம் குறிகள்

செகராசசேகர வைத்திய திறவுகோல்எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட**ஆமசிலேற்பன** சுரத்தின் குறிகுணங்களாக உறக்கம், உடல்வலி, இருமல், பசி இன்மை, இடுப்பு நோ, நடுக்கம் என்பன கூறப்பட்டுள்ளன.

### 139.சிலேற்பன அதிசார சுரத்தின் குணம் குறிகள்

**2** நூல்களில் கூறப்பட்டகுறிகுணங்களும் 8 ஆகதொகுத்துக் கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.68 ல் காட்டப்பட்டுள்து

1 இருமல்
2 முகமதைக்கும்
3 வயிறு பொருமும்
4 தாகம்
5 வயிறு இரையும்
6 வயிறு கழியும்
7 புறங்கால் புறங்கை வீங்கும்.
8 நாவறட்சி

**140 சிலேற்பன சன்னி சுரத்தின் குணம் குறிகள்**

செகராசசேகர வைத்திய திறவுகோல்,பரராசசேகரம் எனும் நூல்களில் **சிலேற்பன சன்னி சுரம் கூறப்பட்ட போதும்** செகராசசேகர வைத்திய திறவுகோல் எனும் நூலில் மட்டும் குணங்குறிகள் கூறப்பட்டுள்ளன.அவையாவன தலை வலி, இருமல்,தூக்கம் இன்மை என்பனவாகும்.

**141 சிலேற்பனசுரத்தின் குணம் குறிகள்**

செகராசசேகர வைத்திய திறவுகோல் எனும் நூலில் மட்டும் கப சுரம்**சிலேற்பன சுரம் எனும் இரண்டு வகைகளும் காணப்படுகின்றது.** பரராசசேகரம் எனும் நூலில் **சிலேற்பன சுரம் மட்டும் காணப்படுகின்றது.** செகராசசேகர வைத்திய திறவுகோல் எனும் நூலில் கூறப்பட்ட **சிலேற்பனசுரத்தின் குறிகுணங்களாக மயிர் கூச்சல், மூத்திரம் வெண்மை நிறமாக இறங்கும், மயக்கம், குளிர், தித்திப்பு சுவை** என்பன கூறப்பட்டுள்ளன.

142.**சிலேற்பன கண சுரத்தின் குணம் குறிகள்**

பரராசசேகரம் சுரரோக நிதானம்எனும் நூலில் கூறப்பட்ட போதும் அதன் குறிகுணங்கள் கூறப்படவில்லை.

143 **சிலேற்பன சீத சுரத்தின் குணம் குறிகள்**

செகராசசேகர வைத்திய திறவுகோல் எனும் நூலில் மட்டும்கூறப்பட்ட சிலேற்பன சீதசுரத்தின் குறிகுணங்களாக மந்தம், மயக்கம், குளிர், சோர்வு, தாகம், கை கால் கடுப்பு என்பன கூறப்பட்டுள்ளன.

144 .**பித்த சோக சுரத்தின் குணம் குறிகள்**

செகராசசேகர வைத்திய திறவுகோல் எனும் நூலில் மட்டும்கூறப்பட்ட பித்த சோகசுரத்தின் குறிகுணங்களாக உடல் வீங்கும், பெருமூச்சு, இளைப்பு, விக்கல், பிதற்றல, தாகம் என்பன கூறப்பட்டுள்ளன.

145 .**ஆகிக சிலேற்பன சுரத்தின் குணம் குறிகள்**

**2** நூல்களில் கூறப்பட்டஆகிக சிலேற்பன சுரத்தின் குறிகுணங்கள்தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.69 ல் காட்டப்பட்டுள்து

| | |
|---|---|
| 1 உடல் வலி | 6. எரிச்சல் |
| 2 தலை புருவங்களில் வலி | 7. வறட்சி |
| 3 நா உதடு வழுவழுப்பு | 8 முகம் வயிறு வீக்கம் |
| 4 தாகம் | 9 உடல் வெளுப்பு |

| | | | |
|---|---|---|---|
| 5 | மூர்ச்சை | 10 | இளைப்பு |
| | | 11 | இருமல் |

**146 .விச சிலேற்பன சுரத்தின் குணம் குறிகள்**

செகராசசேகர வைத்திய திறவுகோல் எனும் நூலில் மட்டும்கூறப்பட்ட சிலேற்பன சிலேற்பன சுரத்தின் குறிகுணங்களாக கை கால் குளிர்ச்சி, வயிற்றில் சுடு, வியர்வை, கபம் தொண்டை அடைக்கும், பிடரியில் பாரஉணர்ச்சி என்பன கூறப்பட்டுள்ளன.

**147 .கப பஞ்சாகீக சுரத்தின் குணம் குறிகள்**

செகராசசேகர வைத்திய திறவுகோல் எனும் நூலில் மட்டும்கூறப்பட்டகப பஞ்சாகீகசுரத்தின் குறிகுணங்களாக உடல் முகம் கை கால் விதை வீங்கும், அசீரணம் என்பன கூறப்பட்டுள்ளன.

**148 .சிலேத்ம மாகீக சுரத்தின் குணம் குறிகள்**

செகராசசேகர வைத்திய திறவுகோல் எனும் நூலில் மட்டும்கூறப்பட்டசீலேத்ம மாகீக சுரத்தின் குறிகுணங்களாக விலாபக்கத்தில் தோல்களில் காங்கை கண் நாக்கு வெளுக்கும், உட்கொண்ட ஆகாரம் சீரணியாது என்பன கூறப்பட்டுள்ளன.

**149 பித்த பிரதாப சுரத்தின் குணம் குறிகள்**

செகராசசேகர வைத்திய திறவுகோல் எனும் நூலில் மட்டும்கூறப்பட்ட பித்த பிரதாபசுரத்தின் குறிகுணங்களாக நாவறடச்சி, மயக்கம், மூத்திரம் கடுத்து மஞ்சள் நிறமாகி புலால் நாற்றத்துடன் இருக்கும்.உடல் அனல் போல் இருக்கும் என்பன கூறப்பட்டுள்ளன.

**150 .சிலேற்பன மோகச்சுரத்தின் குணம் குறிகள்**

செகராசசேகர வைத்திய திறவுகோல் எனும் நூலில் மட்டும்கூறப்பட்ட பித்த பிரதாபசுரத்தின் குறிகுணங்களாக கை கால்களில் அடிக்கடி குளிர்ச்சி சூடு மாறி மாறி வரும், வியர்வை, மார்பில் கபம் கட்டும் மூச்சு முட்டும், கை கால் மூட்டு நோ இவை சில்லிடும் என்பன கூறப்பட்டுள்ளன.

**151 ஆம சிலேற்பன சுரத்தின் குணம் குறிகள்**

செகராசசேகர வைத்திய திறவுகோல் எனும் நூலில் மட்டும்கூறப்பட்ட ஆம சிலேற்பனசுரத்தின் குறிகுணங்களாக உறக்கம் அதிகரிக்கும், உடல் வலி, இருமல், பசி இன்மை, இடுப்பு நோ நடுக்கம் என்பன கூறப்பட்டுள்ளன.

### 152 கப பஞ்வாகி சுரத்தின் குணம் குறிகள்

செகராசசேகர வைத்திய திறவுகோல் எனும் நூலில் மட்டும்கூறப்பட்டகப பஞ்சாகீகசுரத்தின் குறிகுணங்களாக உடல் முகம் கை கால் விதை வீங்கும், வலி,அசீரணம், வாயு அதிகப்படும் சாப்பாட்டை தள்ளும் என்பன கூறப்பட்டுள்ளன.

### 154 சிலேற்பன நீர் தோச சுரத்தின் குணம் குறிகள்

பரராசசேகரம் சுரரோக நிதானம்எனும் நூலில் மட்டும் கூறப்பட்டசிலேற்பன நீர் தோச சுரத்தின் குறிகுணங்களாக தாகம் மலசலம் கட்டி உடல் முகம் அதைக்கும், வயிற்றில் வாயுமிகுந்து பொருமி மூச்சுமுட்டும் என்பன கூறப்பட்டுள்ளன.

### 155 கப மேக (சிலேற்பன பிரமேகம்) சுரத்தின் குணம் குறிகள்

பரராசசேகரம் சுரரோக நிதானம்எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட கப மேக சுரத்தின் குறிகுணங்களாக அதிகமாக கை கால் எரிந்து விடாமல் சுரம் காயும். சிறுநீர் சீழ் முதலிய அழுக்குப் பொருளுடன் கலந்து தடித்து வெளிவரும். உடுக்கடிபோல் இதயம் இடைவிடாது வேகமாக அடிக்கும் என்பன கூறப்பட்டுள்ளன

### 156 சிலேற்பன நாலா மாறற் சுரத்தின் குணம் குறிகள்

பரராசசேகரம் சுரரோக நிதானம்எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட சிலேற்பன நாலா மாறற் சுரத்தின் குறிகுணங்களாக குளிருடன் சுரம் காய்ந்து வியர்த்துவிடும். பின் அடுத்த 2 தினங்கள் வராமல் நின்று நான்காம் நாள் குறித்த நேரத்தில் வந்து முன்போல் காயும். வாந்தி, இருமல், இரைப்பு. கெண்டைக்கால்களிலுள்ள விசை நரம்புகளிற் சீதளம் பொருந்தி குறுக வாங்கி வலிக்கும். பொருத்துகள், பிடரி வலிக்கும் என்பன கூறப்பட்டுள்ளன.

### 157 மாங்கிச அதிசார சுரத்தின் குணம் குறிகள்

பரராசசேகரம் சுரரோக நிதானம்எனும் நூலில் மட்டும் கூறப்பட்டமாங்கிச அதிசார சுரத்தின் குறிகுணங்களாக இளைப்பு, விக்கல், வியர்வை, கண்வெளுக்கும், அதிசாரம் என்பன கூறப்பட்டுள்ளன.

### 158 சிலேற்பன தொந்த அதிசார சுரத்தின் குணம் குறிகள்

பரராசசேகரம் சுரரோக நிதானம்எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட சிலேற்பன தொந்த அதிசார சுரத்தின் குறிகுணங்களாக குளிருடன் சுரம் காய்ந்து வியர்த்துவிடும், தொண்டையில் சேற்பம் கட்டி இருமலுண்டாகி அசறுடன் சளியைக் கக்கி, இளைப்பு தோன்றி, வயிறு கழிந்து, அரைக்குக் கீழுள்ள அவயவங்கள் குளிர்ந்து, மார்பு முதலியவிடங்களில் அதிக சுரமுண்டாகும். உள்ளுறுப்புகளில் அவியல், அழற்சி, மயக்கமொடு மிகு தாகம் ஏற்படும்.இடையிடையே

நெஞ்சடைக்கும். இவ்வேதனை செருமினாற் சிறிது சுகமுண்டாகும் என்பன கூறப்பட்டுள்ளன.

### 159 நீருதிரிச் சுரத்தின் குணம் குறிகள்

பரராசசேகரம் சுரரோக நிதானம்எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட நீருதிரிச் சுரத்தின் குறிகுணங்களாக குளிருடன் சுரம் காய்ந்து வியர்த்துவிடும், வெப்பமாக சுரம் காயும், உடம்புழற்றும், விக்கல், சத்தி, இளைப்பு இருமலுண்டாகும்.அவயவங்களில் உள்ள தோலில் நீர்கோர்த்து வீக்கமுண்டாகி வெடித்து நீர் வடியும். வயிறிரையும். நாக்கு நற்சுவையற்றுக் கருநிறமடையும். உடம்பு மெலியும் என்பன கூறப்பட்டுள்ளன.

### 160 சிலேற்பன பிரதாப சுரத்தின் குணம் குறிகள்

பரராசசேகரம் சுரரோக நிதானம்எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட சிலேற்பன பிரதாப சுரத்தின் குறிகுணங்களாக குளிருடன் சுரம் காய்ந்து வியர்த்துவிடும், உடம்பிற் சுரவேகமதிகரித்து நாளடைவிலே என்பினுள்ளிருக்கும் மச்சையைப்பற்றி அதையுருகச்செய்து சலப்பைக்கு வந்து சலத்துடன் கருநிறமாய் வெளிப்படும். பொருத்துகளில் நோவும் வீக்கமும் உண்டாகும். அவ்வீக்கத்தில் விரல் நுனியால் அமர்த்தி பார்த்தால் பள்ளமுண்டாகி அப்பள்ளம் நெடுநேரம் மறையாமல் இருக்கும். இடையிடையே சலத்தோடு இரத்தம் வெளிப்படும். அதிசாரம், இளைப்பு, இருமல் தோன்றும் என்பன கூறப்பட்டுள்ளன.

### 161 சிலேற்பன சோக சுரத்தின் குணம் குறிகள்

பரராசசேகரம் சுரரோக நிதானம்எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட சிலேற்பன சோக சுரத்தின் குறிகுணங்களாக குளிருடன் சுரம் காய்ந்து வியர்த்துவிடும்,இருமல், உடம்பிலுள்ள பொருத்துகளில் உளைவு, அதிக தாகம், களை, கோழை யுண்டாகும். மயக்கம், அதிதாகம்,அறிவற்றுப் பேசுதல், நாக்கு கறுத்து அரம்போல் முள்ளுண்டாதல், கை கால் தடித்து வீங்கும் என்பன கூறப்பட்டுள்ளன.

### 162.சிலேற்பன தொந்த சிலேற்பன சுரத்தின் குணம் குறிகள்

பரராசசேகரம் சுரரோக நிதானம் எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட சிலேற்பனதொந்த சிலேற்பனசுரத்தின் குறிகுணங்களாக மயக்கம், அதிதாகம், அறிவற்று பேசல், கை கால் கனப்புடன் தடித்து வீங்கல் என்பன கூறப்பட்டுள்ளன.

### 163 சிலேற்பன சன்னி பாத சுரத்தின் குணம் குறிகள்

பரராசசேகரம் சுரரோக நிதானம் எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட சிலேற்பன சன்னி பாத சுரத்தின் குறிகுணங்களாக குளிருடன் சுரம் காய்ந்து வியர்த்துவிடும், தேகத்தின் பிடரி, தலை முதலிய உறுப்புகள் தோறும் புண்போல் நோகும். அறிவுகெட்டு பிதற்றி பேசும். இளைப்புடன் அதிக தாகம், வாயில் விடஞ்செறிந்த

தன்மைபோல் கசப்புசுவை கண்டு நா வரண்டு கறுக்கும். கழிச்சல், உழலை, நா, மூக்கு வெடித்து புண்ணாகும். சத்தியுடன் கழுத்து நெற்றி வேர்வை காணும் என்பன கூறப்பட்டுள்ளன.

### 164 தோலைப்பற்றிய சுரத்தின் குணம் குறிகள் - சிலேற்பன பித்தத்தில் வருவது

பரராசசேகரம் சுரரோக நிதானம ் எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட் தோலைப்பற்றிய சுரத்தின் குறிகுணங்களாக குளிருடன் சுரம் காய்ந்து வியர்த்துவிடும், காலிலும் வயிற்றிலும் எரிவு. கண்ணும் தலையும் நோகும். பால் பழம் போன்ற மதுரசுவையுள்ள பொருள்கள் கசப்புச்சுவையுண்டாக்கும். அதிகமாக நா வரளும். உடம்பில் வியர்வையின்றி சுரம் காயும். என்பன கூறப்பட்டுள்ளன.

### 165 தலையைப்பற்றிய சுரத்தின் குணம் குறிகள்- வாதத்தில் வருவது

பரராசசேகரம் சுரரோக நிதானம் எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட தலையைப்பற்றிய சுரத்தின் குறிகுணங்களாக குளிருடன் சுரம் காய்ந்து வியர்த்துவிடும், சுரம், தேக நடுக்கம், பொருத்துகளிலும் வயிற்றிலும் நோவு, கடுப்பு, பொருமல், பிதற்றிப்பேசுதல், என்பன கூறப்பட்டுள்ளன.

### 166 .தசையில் விட சுரத்தின் குணம் குறிகள்

பரராசசேகரம் சுரரோக நிதானம் எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட தசையில் விட சுரத்தின் குறிகுணங்களாக சோர்வு, இருமல், வியர்வை, சிறுநீர் குறைவு, முகம் கறுத்தல், தேக வறட்சி, உளைவு, நோ, வாந்தி, விக்கல்என்பன கூறப்பட்டுள்ளன.

### 167.சீத வாத சுரத்தின் குணம் குறிகள்

பரராசசேகரம் சுரரோக நிதானம ் எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட சீத வாத சுரத்தின் குறிகுணங்களாக உடல் நடுங்கும், உடல் குளிர்ந்து விறைக்கும், சோம்பல், விக்கல், மலக்கட்டு, பிதற்றல், தலையிடி,வியர்வை என்பன கூறப்பட்டுள்ளன.

### 168 .வாதத்திற் சன்னி பாத சுரத்தின் குணம் குறிகள்

பரராசசேகரம் சுரரோக நிதானம் எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட வாதத்திற் சன்னி பாதகுறிகுணங்களாக தலையிடி, இருமல், இதய துடிப்பு அதிகரிப்பு, நா வறளும், நடுக்கம் என்பன கூறப்பட்டுள்ளன.

### 169 பித்தரத்த பிரமேக சுரத்தின் குணம் குறிகள்

பரராசசேகரம் சுரரோக நிதானம் எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட பித்தரத்த பிரமேக சுரத்தின் குறிகுணங்களாக குளிருடன் சுரம் காய்ந்து வியர்த்துவிடும், உள்ளங்கை உள்ளங்கால் எரியும். அடிக்கடி மிகுந்து குறைந்து சுரங்காயும். தொண்டை கனத்துப் புகைந்து புண்போல் நொந்து இருமும். சிறுநீரில் இரத்தம் கலந்து கடுப்புடன் வெளிவரும். காதடைத்து இரைச்சல் ஏற்படும். உடம்பில் ஒருவகை துர்நாற்றம் வீசும் என்பன கூறப்பட்டுள்ளன.

### 170 சிலேற்பன அத்தி சுரத்தின் குணம் குறிகள்

3 நூல்களில் கூறப்பட்ட**சிலேற்பன அத்தி**சுரத்தின் குறிகுணங்கள்தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. இவற்றின் நூல் ஆய்வு விபரம் அட்டவணை 3.70 ல் காட்டப்பட்டுள்ளது

| | | | |
|---|---|---|---|
| 1 | கண் சிவப்பு | 10 | கண் எரிச்சல் |
| 2 | புத்தி பேதலிப்பு | 11 | வீக்கம் வெளுப்பு |
| 3 | நெஞ்சு நோ | 12 | இருமல் |
| 4 | சிறு நீர் சிவப்பு | 13 | இளைப்பு |
| 5 | மயக்கம் | 14 | வியர்வை |
| 6 | நித்திரை இன்மை | 15 | பொருமல் |
| 7 | கழிச்சல் | 16 | தாகம் |
| 8 | உடல் வற்றல் | 17 | தாபம் |
| 9 | உடல் குளிர்ச்சி வறட்சி | | |

### 171 .மாங்கிச பிசதாபசுரத்தின் குணம் குறிகள்

பரராசசேகரம் சுரரோக நிதானம் எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட மாங்கிச பிசதாபசுரத்தின் குறிகுணங்களாக உடல் அழற்சி, மூத்திர துவாரத்தில் சீழ் இரத்தம் வருதல் என்பன கூறப்பட்டுள்ளன.

### 172 விரணவாத சுரத்தின் குணம் குறிகள்

3 நூல்களில் கூறப்பட்ட போதும் பரராசசேகரம் சுரரோக நிதானம், அகத்தியர் 2000எனும் நூல்களில் மட்டும் கூறப்பட்ட விரணவாத சுரத்தின் குறிகுணங்களாக அதிக சுரம் வேதனை, தலைவலி, சிரம் பிடரி வலி, நரம்புகளை இசிந்து வலிக்கும்என்பன கூறப்பட்டுள்ளன.

### 173 பித்த தாக சுரத்தின் குணம் குறிகள்

பரராசசேகரம் சுரரோக நிதானம்எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட**பித்த தாக**சுரத்தின்அதிக வேகத்துடன் சுரங்காயும். நாவிற் துவர்ப்புண்டாகி

வறட்சியுண்டாகி அடிக்கடி கடிக்கும். அறிவு மயக்கம், மலசலம் வெப்பமடையும் என்பன கூறப்பட்டுள்ளன

### 174 பித்த விஷ சிலேற்பன அத்தி சுரத்தின் குணம் குறிகள்

பரராசசேகரம் சுரரோக நிதானம்எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட **பித்த விஷ சிலேற்பன அத்தி சுரத்தின்**குறிகுணங்களாகஇரவில் நடுசாமத்தில் நோயாளி நாவரண்டு தாகமுண்டாகி தண்ணீர் குடிப்பான். உடலில் அழற்சி ஏற்படும். அதிக சுரம், மூச்சு முட்டுச் சளியுடன் மர்மத்தானத்தில் நோவு மிகுதியாகிய உபத்திரவங்களை செய்து பின்னர் அஸ்தித்தாதுவில் அடங்கும் என்பன கூறப்பட்டுள்ளன

### 175 பித்த சய சுரத்தின் குணம் குறிகள்

பரராசசேகரம் எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட பித்த சய சிலேற்பன சுரத்தின் குறிகுணங்களாக குளிருடன் சுரம் காய்ந்து வியர்த்துவிடும், சுரத்தோடு இருமல் தோன்றும். தொண்டை புகைத்து கட்டும். கை முகம் கண் வெளிறி கருமையும் சேர்ந்திருக்கும். நாக்கு அரம் போல் சொருசொருப்பாக வெளிறி காணும். அதில் அசறு ஏற்பட்டு நாற்றம் வெளிப்படும் என்பன கூறப்பட்டுள்ளன்.

### 176 இரத்தபித்த உதிரிச் சுரத்தின் குணம் குறிகள்

பரராசசேகரம் சுரரோக நிதானம்எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட சிலேற்பன இரத்தபித்த உதிரிச் சுரத்தின் குறிகுணங்களாக குளிருடன் சுரம் காய்ந்து வியர்த்துவிடும். இருமல், இரத்தமாக வாந்தியெடுத்தல்,மயக்கம், தேக வீக்கம், வயிற்றுப்பொருமல், மலசலம் கட்டுப்படல். மலசல வாயிலாகவும் இரத்தபித்தம் வரலாம் என்பன கூறப்பட்டுள்ளன்.

### 177 கரபாத பித்த சுரத்தின் குணம் குறிகள்

பரராசசேகரம் சுரரோக நிதானம்எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட கரபாத பித்த சுரத்தின் குறிகுணங்களாக குளிருடன் சுரம் காய்ந்து வியர்த்துவிடும், கை கால் எரிவுடன் புண்ணாகி அசறு பற்றி துர்நாற்றம் வீசும். அக்னி போல சுரம் காயும், வாந்தி உள்மூச்சு. மலசலம் மஞ்சள் நிறம். காதில் இரைச்சல் ஏற்படும் என்பன கூறப்பட்டுள்ளன

### 178 பித்த பிரமேக சுரத்தின் குணம் குறிகள்

பரராசசேகரம் சுரரோக நிதானம்எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட பித்த பிரமேக சுரத்தின் குறிகுணங்களாக குளிருடன் சுரம் காய்ந்து வியர்த்துவிடும், சுரத்தோடு தாகம், மயக்கம், சோர்வு, நாவறட்சி. சிறுநீர் கடுத்து துர்நாற்றமுள்ள மஞ்சள்

சீழுடன் வெளிப்படும். வாய்வு அதிகரித்து உணவு குறையும், எந்நேரமும் தேகத்தில் அக்னி போல் காந்தும் என்பன கூறப்பட்டுள்ளன

### 179 பித்த இரத்த அதிசார சுரத்தின் குணம் குறிகள்

பரராசசேகரம் சுரரோக நிதானம் எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட பித்த இரத்த அதிசார சுரத்தின் குறிகுணங்களாக குளிருடன் சுரம் காய்ந்து வியர்த்துவிடும், சுரத்துடன் வயிறு பொருமி இரைச்சல் அதிகரித்து இரத்த கழிச்சல் ஏற்படும், தேகஞ் சோரும், மயக்கமிகும். பொருத்துகளில் புண்போல் நோகும் என்பன கூறப்பட்டுள்ளன

### 180 பித்த மேக சுரத்தின் குணம் குறிகள்

பரராசசேகரம் சுரரோக நிதானம்எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட பித்த மேக சுரத்தின் குறிகுணங்களாக குளிருடன் சுரம் காய்ந்து வியர்த்துவிடும், அதிக தாகம், பிரமை. அக்னிபோல் சுரம் காயும். உடம்பில் சோர்வு. மலசலம் அடைக்கும். சோகம் வெளிப்படும். களை, மூச்சு, இளைப்பு, துரப்பு தோன்றும் என்பன கூறப்பட்டுள்ளன

### 181 சிலேற்ப சய சுரத்தின் குணம் குறிகள்

பரராசசேகரம் சுரரோக நிதானம்எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட சிலேற்பன சய சுரத்தின் குறிகுணங்களாக குளிருடன் சுரம் காய்ந்து வியர்த்துவிடும்,இருமல், கூதல், இளைப்பு, விக்கல், செருமல், முகக்கனப்பு, தலையிடி, அக்னிபோல் சுரம் காயும் என்பன கூறப்பட்டுள்ளன

### 182 சிலேற்பன மாங்கிஷ உதிரிச் சுரத்தின் குணம் குறிகள்

பரராசசேகரம் சுரரோக நிதானம்எனும் நூலில் மட்டும் கூறப்பட்ட சிலேற்பன மாங்கிஷ உதிரிச் சுரத்தின் குறிகுணங்களாக குளிருடன் சுரம் காய்ந்து வியர்த்துவிடும். உடம்பிலுள்ள பொருத்துகளிற் புண்ணைப்போல் நொந்து உளைந்து மிகவும் துன்பமுண்டாகும். மயக்கம், வாந்தி, அறிவு கெடல், விக்கல், வியர்வை ஏற்படும் என்பன கூறப்பட்டுள்ளன.

**சுரவகைகளை நோக்கும் போது சுரம் பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்பட்டுள்ளது.**

| **வகைப்பாடு** | **வகைகளின் எண்ணிக்கை** |
|---|---|
| தோசங்களை அடிப்படையாகக் கொண்டு(தோ) | 11 |
| தாதுக்களைப்பற்றிய சுரம்(தா) | 17 |
| தோசம்,தாது,குறிகுணம் என்பன கலந்த வகை(அ) | 64 |
| சுரம் ஏற்படுவதற்க்கான காரணங்களை வைத்து(கா) | 12 |
| குறிகுணங்களை மட்டும் வைத்து(கு) | 26 |
| தெய்வ குற்றம், ஏவல் | 3 |
| சுரத்தின் போக்கை வைத்து(ஆ) | 13 |
| உணர்ச்சி வசப்படும் நிலைகளை வைத்து | 8 |
| வகைப்படுத்த முடியாதது | 28 |

அட்டவணை 01

| எண் | காரணங்கள் | சரபேந்திரர் வைத்திய திரட்டு | வைத்திய சார சங்கிரகம் | அகத்தியர் குணவாகடம் | யூகி வைத்திய சிந்தாமணி | அகஸ்தியர் 2000 | தன்வந்திரி வைத்தியம் | அனுபோக வைத்திய பிரம்ம ரகசியம் | செகராச சேகரம் | நோய் நாடல் நோய் முதல்நாடல் | அகத்தியர் 4000 | சித்த மருத்துவம் பொது | அகத்தியர் வைத்திய காவியம் 1500 | பரராச சேகரம் சுர ரோக நிதானம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மந்தம் | | | | | | | √ | | √ | | | | √ |
| 2 | மலக்கட்டு | | | | | √ | | | √ | √ | | √ | | √ |
| 3 | முக்குற்றம் கூட்டக்கூடிய உணவுகள் | | | | | | | | | √ | | | | |
| 4 | மிகு உழைப்பு | | | | | | | | | √ | | | | |
| 5 | மிகு வெப்பம் | | | | | | | | √ | √ | | | | |
| 6 | பனியில் திரிதல் | | | | | | | | | √ | | | | |
| 7 | கருவி காரணாதிகளின் கவலை | | | | | | | | | √ | | | | |
| 8 | மிகுந்த குளிர்ச்சி | | | | | | | | | √ | | | | |
| 9 | மிகுந்த புணர்ச்சி | | | | | | | √ | √ | √ | | √ | √ | √ |
| 10 | தூக்கமின்மை | | | | | | | | | √ | | | | |
| 11 | மிகுந்த காற்று | | | | | | | | | √ | | | | |
| 12 | விடக் காற்று | | | | | | | | | √ | | | | |

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
